விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 | பங்குனி 4 | ரஜப் 5 | இதழ் 35
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 17-3-1986

## சந்தியில் குழுமி நின்ற 46பேர் கைது!

### ஒருவர் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலி

[மட்டக்களப்பு]
தெருச்சந்தியில் 'அரட்டை' அடித்துக்கொண்டு நின்ற 46 பேரைத் திடீரென வாகனம் ஒன்றில் வந்திறங்கிய அதிரடிப் படையினர் சுற்றிவளைத்துக் கைதுசெய்துள்ளனர்.

அப்பொழுது பீதியினால் தப்பியோடிய சிலரை நோக்கி அதிரடிப்படையினர் துப்பாக்கிப்பிரயோகம்செய்தபொழுது ஒருவர் பலியானார்.

மட்டக்களப்பு நாவலடி உன்னிச்சை 8ம் கட்டைச் சந்தியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

தப்பியோடிய நா. விக்ன ராசா (வயது 20) என்பவரே பலியானவராவார்.

நெல் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த லொறி ஒன்றில் ஏறிச்சென்ற அதிரடிப்படையினரே இச்சம்பவத்தில் ஈடுபட்டதாகவும், கைதுசெய்யப்பட்ட 46 பேரும் கரடியனாறு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

'ட்ராக்டரி'ல் வயலுக்கு வந்தவர்கள்மீது

# துப்பாக்கிச் சூடு: 10 பேர் பலி!

# கிளிநொச்சியில் சம்பவம்

(கே. வி. கே. திருலோகமூர்த்தி)

**கிளிநொச்சி மூன்றும வாய்க்கால் பகுதியில் ஹெலிகொப்டர் மூலம் தேடுதல் நடத்திய இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில், வயலுக்கு 'ட்ராக்டரில்' வந்துகொண்டிருந்த பத்துப் பேர் பலியானூர்கள்! பலர் காயமடைந்தனர்!**

நேற்றுக்காலை முதல் நண்பகல் வரை நடந்த தேடுதலின் போது கோவிந்தன் கடைச் சந்திக்கு அருகாமையில் இச்சம்பவம் நடந்துள்ளது இதனைத் தொடர்ந்து கிளிநொச்சியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

வாகனப் போக்குவரத்துக்கள் ஸ்தம்பித்ததுடன் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு, நகர் வெறிச்சோடிக்கிடந்தது.

இச்சம்பவத்தில்இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் வயலில் அரிவுவெட்டிக் கொண்டிருந்த சந்தணம் ஞான ஆதிக்கம் (21 வயது) ஸ்தலத்திலே பலியானூர்.

இவரது சகோதரரான சந்தணம் இராசேந்திரம் (26வயது) துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

இவர் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்

(5 ம் பக்கம் பார்க்க)

## வல்வை சம்பவம்: 6 பேர் பலி!

[யாழ்ப்பாணம்]
வல்வெட்டித்துறையில் நேற்று இடம்பெற்ற தாக்குத

[12 ம் பக்கம் பார்க்க]

## கடலைக்கடையில் வெடிமருந்துகள்

### கொழும்பில் இருவர் கைது

[கொழும்பு]
கொழும்பு- தெமட்டகொட வீதியிலுள்ள கலைக்கடையொன்றிலிருந்து இரண்டு பீப்பாக்கள் நிறைந்த வெடிமருந்தை புலனாய்வுப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து கடை உரிமையாளரும், ஊழியரும் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைதான கடை உரிமையாளர் இரத்தினபுரியைச் சேர்ந்தவர் என்றும், கடந்த மாதம் கொழும்புக் குண்டுசதி முயற்சியில் சம்பந்தப்பட்ட போல் ஜெயசீலன் என்பவருடன் இவருக்கும் சம்பந்தம் இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது. [ய-பி]

## "தமிழரைக் காப்பாற்றுவது முஸ்லிம்கள் கடமை"

### பதியுதீன் மஹ்'மூத் அறைகூவல்

[கொழும்பு]
"இனப்பிரச்னைக்குத் தீர்வு காணப்படும் விஷயத்தில் அத்தீர்வினைக் குழப்பியடிக்கக் கூடாது. தமிழர்கள் எம்மைப் போன்று சிறுபான்மையினரே. அவர்களைக் காப்பாற்றுவது முஸ்லிம்களாகிய எங்கள் கடமை. எங்களைக் காப்பாற்றுவது அவர்களது கடமை".

இவ்வாறு நேற்று நடைபெற்ற 'ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்' புதியஅரசியற்கட்சி அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் கல்வி அமைச்சர் அல்ஹஜ் பதியுதீன் மஹ்மூத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில்; "கடந்த ஆண்டு தமி

[5-ம் பக்கம் பார்க்க]

## "தமிழ் தீவிரவாதிகள் பிரச்னை அரசு தவறான வழியில் கையாளுகிறது; சரியானதீர்வு என்னிடம் இருக்கிறது"

[கொழும்பு]
"இனப்பிரச்னை தேசிய முக்கியத்துவம் அடைந்துவிட்டது. அதற்கு உடன் தீர்வு காண்பது அவசியம். வடக்கிலும், கிழக்கிலும் போராடி வரும் தமிழ்த் தீவிரவாதிகளின் தற்போதைய பிரச்னையை அரசு தவறானவழியில் கையாள்கிறது. இதற்கான சரியான தீர்வு என்னிடம் உள்ளது

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

"இனப்பிரச்னைக்குத் தீர்வு காணும் விஷயத்தில் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார். ஆனால் உத்தியோகபூர்வ அழைப்பு வரவேண்டும்" என்றும்தெரிவித்தார்.

"பொது மேடைகளிலும்,

[5ம் பக்கம் பார்க்க]

## "பொதுசன நிறுவனங்களின் இணைப்புக்குழுவுடன் இணைவது சாத்தியமில்லை!

### பிரஜைகள்குழு இணைப்புக்குழு முடிவு

[யாழ்ப்பாணம்]
பிரஜைகள்குழு இணைப்புக் குழுவினர் பொதுசன நிறுவனங்களின் இணைப்புக்குழுவில் இணைவது சாத்தியமில்லை என்றும் அத்தியாவசிய காலங்களில் கூட்டு நடவடிக்கைகளில் பிரஜைகள்குழு சேர்ந்து இயங்குமென்றும், அதேபோல் பிரஜைகள் குழுவின் நடவடிக்கைகளிலும், பொதுசன நிறுவனங்களின் இணைப்புக் குழுவைச் சேர்த்து கொள்வதென்றும், பிரஜைகள்குழு இணைபுகுழு தீர்மானித்துள்ளது

நல்லூர் இந்து விடுதியில் பேராசிரியர் க சிவத்தம்பி தலைமையில் நேற்றுக்காலை நடந்த பிரஜைகள் குழு இணைப்புக்குழ கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

[5ம் ப கம் பார்க்க]

வலிகாமம் வடக்கில்

## 'அநாதை'களாக வெளியேறும் அப்பாவிக் குடும்பங்கள்!

(மாவிட்டபுரம்)
வலி-வடக்கில் பல்வேறு கிராமங்களையும் சேர்ந்த பெருந்தொகையான மக்கள் குழந்தை குட்டிகளுடனும், மூட்டை முடிச்சுகளுடனும் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களை நாடும் பரிதாப சூழ்நிலை நேற்றுமுன்தினர்முதல் இடம்பெற்று வருவதுடன் இப்பகுதியில் பதற்றமும் அதிகரித்துள்ளது.

வலி-வடக்குப் பகுதியைச் சேர்ந்த பலாலி, மயிலிட்டி, வசாவிளான், இடைக்காடு, வளலாய். ஊறணி, காங்கேசன்துறை போன்ற பல கிராமங்களையும சேர்ந்த பெருந்தொகையான மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிவருகின்றனர்.

பலலி இராணுவமுகாம், விமானநிலைய சுற்றுடல் பகுதிகளில் இடம்பெற்றுவரும் குண்டுத்தாக்குதல்கள், துப்பாக்கிச்சூடுகள் காரணமாக ஏற்பட்டிருந்த பதற்றநிலை தற்போது மேலும் அதிகரித்து அயல் கிராமங்களிலும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

பெரும் செலவில் கட்டிய வீடுகள், உடைகள், விவசாயப் பயிர்கள் எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிட்டு துக்கம் தோய்ந்த முகங்களுடனும், ஏதோ நடக்கப்

(5ம பக்கம் பார்க்க)

## வீடுகள்சேதம்! பார்வையிட சென்றவர்கள் தாக்கப்பட்டனர்!

(மாவிட்டபுரம்)
மயிலிட்டி வடக்குப் பகுதியிலிருந்து மக்கள் தமதுவீடுகளை விட்டு வெளியேறிய பின்னர் வீடுகள் சேதமாக்கப்பட்டு அங்கிருந்த பொருட்களும் அடித்து நொருக்கப்பட்டதாம்.

அத்துடன் வீடுகளைபார்வையிடச் சென்றவர்கள் தாக்குதலுக்கும் உள்ளானூர்களாம்.

மயிலிட்டி வடக்கு பிரஜைகள் குழுவிடம் இதுகுறித்து முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விமான நிலையப்பகுதிக்குச் சமீபமாக வசித்த மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த 53 குடும்பங்களை 48 மணி நேரத்திற்குள் அவ்விடங்களை விட்டு

(5ம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

3½ பரப்புக்காணியில், கண்ணகை அம்மன் வீதி, அப்பிளானை, கோப்பாய் வடக்கு விலாசத்தில் அமைந்துள்ள எல்லா வசதிகளையும் (கராஜ் உட்பட) கொண்ட வீடு ஒன்று விற்பனைக்குண்டு. விளம்பர இலக்கம்: C-1245 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C-1245

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காயவிதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். C-1220

அக்ஷய வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் விற்பனையாகிறது. விலை ரூபா 16/- கிடைக்குமிடம்: சோதிட விலாச புத்தகசாலை, 46, பெரியகடை, யாழ்ப்பாணம், வியாபாரிகளுக்கு விசேஷ கழிவுண்டு. (C 1208)

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு தொடர்பு: சிமாட்டி பான்சி குட்ஸ், 158, நவீன சந்தை, யாழ்ப்பாணம். [C 1244]

காரைநகர் களபூமி பொன்னாவளையில் 8½ பரப்புக் காணியில் கிணற்றுடன் சிறிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: அருட்செல்வம் நடராசா, 26/2, சேர் பொன் இராமநாதன் லேன், திருநெல்வேலி. (C- 1266)

## தேவை

மரவடைச்சல் வேலைகள் தெரிந்த, பழகவிரும்பும் பெண்கள் தேவை. யாழ் மாநகர எல்லைக்குள் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவு திகதி 21-03-86 முகவரி: விளம்பர இல: C 1269 C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம் C 1269

## மணப்பந்தல்

இந்துமத வேளாள குலத்தைச் சேர்ந்த அழகிய, குற்றமற்ற பயிற்றப்பட்ட ஆசிரியைக்கு வரன் தேடுகிறார்கள் 45 வயதிற்குட்பட்டவராயும். அரசாங்கத்தில் அல்லது தனியார் துறையில் தொழில்புரிவோராகவும் இருப்பது விரும்பத்தக்கது. தகுந்த சீதனம் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்குகீழுள்ள முகவரிக்கு தொடர்பு கொள்ளவும் விளம்பர இல; C 1274 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 1274)

## CLASSES

Radio, T-V வகுப்புக்கள் ஆரம்பம் 1-4-1986 அத்துடன் இவை திருத்தியும் கொடுக்கப்படும். விபரங்களுக்கு: வி. நித்தியானந்தன் கல்வளை சண்டிலிப்பாய். C 1268

## இன்று 11-ம் திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரஸ்வாமி தேவஸ்தான 11வது தினமான மகோற்சவதினமான இன்று (திங்கள்) பஞ்சமூர்த்திகள் உற்சவம் நடைபெறும்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி

(17-03-86) திங்கள்



**வ. சூ. அருளப்பா**

ஆண்டவன் படைப்பு: 16-07-1909

ஆர்பவன் அழிப்பு: 15-02-1986

"உயிர் வாழ்க்கையில் என்னில் விசுவாசம் கொள்பவன் எவனும் ஒருபோதும் இறக்கான்" ஆல விருட்சம் போல் எங்கள் குடும்பங்களை எல்லாம் அன்புடன் வழி நடத்திய அன்புத் தெய்வமே! என்மை எல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு மின்னலென அணைந்து விட்ட எங்கள் குலவிளக்கே! எங்கள் நெஞ்சங்கள் இருக்கும் வரை உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும். தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

பெரியவிளான், இளவாலை. C 1264

மு. க. முத்துக்குமார், சட்டத்தரணி, பருத்தித்துறை.

## முதற்கண் முற்றுகும் ஆணை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

கரவெட்டி வடக்கு நெல்லியடி காலஞ்சென்ற முருகேசு இராஜதுரை என்பவரது மரணசாதன சொத்து விடயத்தில்,
— மரணமெய்தியவர்.

வழக்கு இலக்கம்; மரணசாதன நியாயாதிக்கம் } 1236/ Testy

முருகேசு இராசதுரை கைம்பெண் சரஸ்வதி, மகாத்மா ஒழுங்கை, நெல்லியடி. கரவெட்டி வடக்கு,
மனுதார்.

மேற்குறித்த இந்நீதிமன்றில் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மரணமெய்தியவரின் மரணசாதனத்தை நிரூபிப்பதற்காக மேலே குறித்துள்ள இலக்கம் கொண்ட வழக்கு தொடரப்பட்டுள்ளதென்றும் குறித்த வழக்கில் 1985ம் ஆண்டு மார்கழி மாதம் 20ம் திகதி முதற்கண் முற்றுகும் ஆணை அவ்விதமாகப் பதியப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1985ம் ஆண்டு மார்கழி மாதம் 20ம் திகதி.

மன்றின் ஆணைப்படி,
சண்முகம் நடராசா,
(ஒப்பம்)
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்று,
பருத்தித்துறை.

வரைவு:
மு. க. முத்துக்குமார்,
(ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி. (A379)

## முதலாம் தவணைப் பரீட்சை

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இவ் ஆண்டுக்கான முதலாம் தவணைப் பரீட்சைகள் இம் மாதம் 20ம் திகதியிலிருந்து ஏப்ரல் மாதம் 2ம் திகதிவரை நடைபெறவுள்ளது. சகல பாடசாலைகளிலும் யாழ். கல்வித் திணைக்களத்தினரால் இப் பரீட்சை நடாத்தப்பட்டு வருகின்றது.

ஏப்ரல் 4ம் திகதியுடன் முதலாம் தவணை முடிவுற்று விடுமுறைக்காக சகல பாடசாலைகளும் மூடப்படும்.

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், (வ. உ).

## பகிரங்க ஏலவிற்பனை

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் 29-3-86 சனிக்கிழமை காலை 10 மணியவில் பின்வரும் பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும்.

1. நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள்.
2. மின்சார உபகரணங்கள்.
3. இரும்பு உலோகப் பாவனைப்பொருட்கள்.
4. எஸ்லோன் பொருத்துக்கள்.

இப்பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் வேலை நேரங்களில் சங்கத்தில் பார்வையிடலாம்.

தலைவர்,
சங்கானை பல நோ. கூ. சங்கம், சங்கானை.

15-3-86. A 382

இ. சிவசுப்பிரமணியம் சட்டத்தரணி.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ். மணிக்கூட்டு வீதி இல. 64ஐ சேர்ந்த காலஞ்சென்ற திருவேங்கடம் பரமநாதன் என்பவரின் மரணசாதனமில்லா சொத்தின் விடயத்தில்.
— மரணமெய்தியவர்.

பரமநாதன் கைம்பெண் நாகேஸ்வரி, 404, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். — மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம்.

இல. த 3930

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986 ஆம் ஆண்டு மாசி மாதம் 7ம திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

1985ம் ஆண்டு கார்த்திகை மாதம் 5ம் தேதி.
7-2-86

காரணம் காட்டும் தேதி 9-5-86 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்
பதிவாளர். (C1136)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

சண்டிலிப்பாய் என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகமுத்து பெண் செல்லம்மா என்பவரின் மரணசாதன மற்ற மரணச் சொத்துக்கள் விடயத்தில்.
—மரணமெய்தியவர்.

மரண சாதன நியாயாதிக்கம் } இல ரீ/270

இராமு நாகமுத்து, சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்,
மனுதார்.

எதிர்

1. நாகமுத்து தவராசா.
2. மாரிமுத்து பாலசிங்கம்.
3. பாலசிங்கம் பெண் இந்திராணி.
4. மாணிக்கம் சுப்பிரமணியம்.
5. சுப்பிரமணியம் பெண் தேவராணி.

எல்லோரும் சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.
எதிர்மனுதாரர்கள்.

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு வைகாசி மாதம் 7ம் திகதியன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986ம் ஆண்டு மார்ச் மாதம் 11ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆ. பூவார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

வரைவு:
ந. தம்பிமுத்து,
மனுதாரின் சட்டத்தரணி. (C 1241)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



**செல்வி. அருணு திருச்செல்வம்**

பருத்தித்துறை வாரத்துப்பளையைச் சேர்ந்த திருச்செல்வம் - சாந்தாதேவி தம்பதிகளின் அருமைப்புதல்வி செல்வி அருணு தனது முதலாவது பிறந்தினத்தை இன்று (17-03-86 குதூகலமாகக் கொண்டாடுகிறாள்.

அருணுவை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, மாமா மார், அத்தைமார், பெரியப்பா பெரியம்மா, சித்தப்பா மார், சித்திமார், அண்ணன்மார், அக்காமார், மச்சான்மார், மச்சாள் மார், உற்றார், உறவினர் ஆகியோர் இறைவன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

C 1262

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் குரோதன வருடம் பங்குனி மாதம் 7-ந் திகதி (20-3-86) வியாழக்கிழமை பகல் 10-20 மணி முதல் 11-20 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எமது புத்திரன் | எனது புதல்வி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **மோகனராஜா** | **வத்சலாதேவி** |
| அவர்கட்கும் | அவர்கட்கும் |

இறைவன் திருவருளால் திருமண வைபவம் திருச்சி திருவானைக்கால் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த அழைப்பை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

விலாசம்:
'சீ கிங்ஸ்'',
5and6, R. R. S. பில்டிங், 146, வெஸ்ட்போல் ரோட், திருச்சி - 2.

இங்ஙனம்

நா. கருணைரத்தினம், (முன்னாள் C. T. B டிப்போ பரிசோதகர்) தம்பதிகள், சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.

திருமதி ச. குமாரசுவாமி, அதிபர், (ஸ்ரீசண்முகநாத அச்சகம்) 239, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(C 1205)

# "லலித்தின் புதிய அறிவிப்பில் பயனில்லை, ஒரு அகதியாவது இலங்கை திரும்பவில்லை!"

## தமிழக மறுவாழ்வுத்துறை அமைச்சர் தகவல்

(சென்னை)

''இலங்கையில் தமிழர் பிரதேசங்களில் நடத்தப்படும் விமானத் தாக்குதல்களை ஒரு வாரகாலத்துக்கு நிறுத்திவைப்பதென்றும் இந்தியாவிலுள்ள அகதிகள் மீண்டும் நாடு திரும்பும் வகையில் கடல் கண்காணிப்பை அகற்றுவதென்றும் இலங்கை பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி விடுத்துள்ள அறிக்கையில் எவ்வித பயனும் இல்லை'' என்று தமிழக மறுவாழ்வுத்துறை அமைச்சர் திரு டீ. இராமசாமி கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இராமேஸ்வரத்தில் நிருபர்கள் மத்தியில் இதனைக்கூறிய அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியின் இந்த அறிவிப்புக்குப்பின் இதுவரை ஒரு அகதியாவது இலங்கைக்குத் திரும்பவில்லை என்றும் தெரிவித்தார்.

அமைச்சர் திரு. இராமசாமி கடலோர பாதுகாப்புப் படகொன்றின் மூலம் சென்று இந்திய மீனவர்களுக்குக் கடலில் செய்யப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளையும் பார்வையிட்டார். (ரா)

## உலகச் செய்திகள்

### இலங்கைத் தமிழ் அகதிகள்

## நாடு திரும்பும் பேச்சுக்கு இடமில்லை ஈ. தே. வி. முன்னணி அறிவிப்பு

[சென்னை]

''இலங்கையில் தமிழர்பகுதிகளில் நடத்தப்படும் விமானத் தாக்குதல்களை ஒருவாரகாலத்துக்கு நிறுத்திவைத்தால், இந்தியாவந்துள்ள இலங்கை தமிழ் அகதிகள் தாயகம் திரும்ப உதவியாக கடல்கண்காணிப்பு நீக்கப்படுதல் பற்றி இலங்கை பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி விடுத்துள்ள அறிவிப்புவெறும் கண்துடைப்பே ஆகும்'' என்று ஈழதேசிய விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் சென்னையில் முன்னணியின் பிரமுகர் ஒருவர் நிருபர்கள் மத்தியிரி பேசும் போதே இதனைத்தெல்வித்தார்.

இந்த அறிக்கை குறித்து தாம் அக்கறைகொள்ளவில்லை என்றும் எனவே அதனைப் பற்றி தாம் விவாதிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் கமிஷனில் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காகவே இந்த அறிவிப்பு என்று கூறிய அந்தப்பிரமுகர் ''இலங்கைக்கு உதவிவழங்குவது சம்பந்தமாக சுவிஸ் நாடாளுமன்றம் தீர்மானம் எடுக்கவுள்ள இந்நேரத்தில் நடத்தப்படும் ஒரு பாஸாங்காகும்' என்றார்.

இந்தஅறிவிப்பு சம்பந்தமாக உத்தியோசபூர்வ அறிவித்தல் தமக்கு இதுவரை கிடைக்கவில்லை என்றுதெரிவித்த அவர் வவனியாவில் தொடர்ந்து நிலைமைகள் கொர்தளிப்பாக இருக்கும் நிலைமையில் அகதிகள்நாடு திரும்புதல் என்றபேச்சுக்கே இடமில்லை என்றும் கூறினார். [ரா]

## காரைநகர் ஷெல் தாக்குதல்; கண்ணிவெடி தவறியதின் எதிரொலி?

(வேலணை)

காரைநகரில் கடற்பகுதியிலிருந்து நடத்தப்பட்ட பீரங்கி ஷெல் தாக்குதலில் பல வீடுகளின் கூரைகளும், மாதா கோயில் சுவர்களும் சேதமுற்றுள்ளன.

கடலில் கண்ணிவெடி தாக்குதல் ஒன்று நடைபெற்றதாகவும், அது குறி தவறியதையடுத்தே இந்த ஷெல் தாக்குதல் நடந்ததாகவும் கூறப்படுகின்றது.

பருத்தியடைப்பு கப்பல் ஏந்திமாதா கோயில் சுவர் துளைக்கப்பட்டுள்ளதாகவும், சென். சந்தியாகோ கோயில் தூண் சேதமுற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. பலவீடுகளின் கூரைகள் சேதமுற்றுள்ளன.

## செஞ்சிலுவைச் சங்கத்தை— தமிழர்களுக்கு உதவ அனுமதியுங்கள்! த வி: கூட்டணி கோருகிறது

(சென்னை)

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் அகதிகளுக்கு செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சர்வதேச ஸ்தாபனங்கள் நிவாரண உதவியளிக்க இலங்கை அரசு அனுமதியளிக்கவேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணி கோரியுள்ளது.

நேற்று சென்னையில் கூடிய இக்கூட்டணியின் 'பொலிட்பீரோ' விடுத்த அறிக்கை ஒன்றில், தமிழ்பகுதிகளில் உள்ள அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் ஸ்தம்பித்துவிட்டனவென்றும், மீன்பிடி மற்றும் விவசாயக் கருவிகளை ராணுவத்தினர் பறித்து அல்லது அழித்து விட்ட தனல் அவர்கள் தமதுபணிகளை மீண்டும் ஆரம்பிக்க முடியாதுள்ளது என்றும் கூறியுள்ளது. (செ)

## இந்தியா ஹெலிகொப்டர் கொள்முதல்

(புதுடில்லி)

பிரிட்டனிடமிருந்து 21 ஹெலிகொப்டர்களை இந்தியா கொள்வனவு செய்யவுள்ளது. இவைகளுக்கான பெறுமதி சுமார் 114கோடி ரூபாய் ஆகும்.

இதுதவிர பிரான்சிடமிருந்து 83 கோடி ரூபா செலவில் மேலும் 27 ஹெலிகொப்டர்களை இந்தியா வாங்கவுள்ளதாகவும் கூறப்பட்டது. [ரா]

## புற்றுநோயாளர் விடுதிக்கு சித்திரையில் அடிக்கல்!

(பண்டத்தரிப்பு)

தெல்லிப்பளையில் இருபது லட்சம் ரூபா செலவில் வடமாகாண புற்றுநோய்ச் சங்கத்தினல் நிறுவப்படவிருக்கும் புற்றுநோயாளர் தங்கும் விடுதிக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் சித்திரை மாதம் நடைபெறவுள்ளது.

கடந்த மாதம் இந்த அடிக்கல் நாட்டு வைபவத்தை நடாத்த திட்டமிட்டிருந்த போதிலும் தெல்லிப்பளைப் பகுதியில் ஏற்பட்ட சம்பவங்களினலும் பதற்ற நிலையினலும் அது ஒத்திவைக்கப்பட்டதாக வடமாகாண புற்றுநோய்ச் சங்கத் தலைவரும், யாழ் பிரதேச பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளருமான டாக்டர் எம். ஜெகநாதன் இது பற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்.

ஊரெழுவைச் சேர்ந்த திரு. த. தம்பிராசா இந்த விடுதியை நிறுவுவதற்காக தமது பதினைந்துப் பரப்புக்காணியை வடமாகாண புற்றுநோய்ச் சங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

பொது மக்களிடமிருந்தும், பொது ஸ்தாபனங்களிடமிருந்தும் இந்த விடுதியை அமைப்பதற்காக தேவைப்படும் 20 லட்சம் ரூபாவையும் சேகரிக்கும் பணியில் சங்கம் ஈடுபட்டு வருவதாகவும், இந்த புனித கைங்கரியத்திற்கு அனைவரும் மனமுவந்து தாராளமாக பண உதவி செய்யவேண்டும் என்றும் டாக்டர் ஜெகநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்

இதேவேளை தெல்லிப்பளையில் நிறுவப்பட்டு வைத்திய நிபுணர் எவரும் இல்லாத நிலையில் இயங்காது இருக்கும் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்திற்கு வைத்திய நிபுணர் ஒருவரை பயிற்சியளித்து நியமிக்க வடமாகாண புற்றுநோய்ச் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கெனப் பெண் வைத்திய நிபுணர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் அவருக்கு மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் பயிற்சியளிக்கப் பட்டுவருவதாகவும், மூன்று வருடகாலப் பயிற்சியை இவர் அங்கு பூர்த்தி செய்த பின்பு தெல்லிப்பளை புற்று நோய்ச் சிகிச்சை நிலையத்தில் கடமையை பெறுப் பேற்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## "மக்களைக் கொல்லும் ஆயுதங்கள் தடைசெய்யப்பட வேண்டும்" -பிரதமர் ராஜீவ்

(ஸ்ரொக்ஹோம்)

''எல்லா நாடுகளும் அணு ஆயுத நாடுகளல்ல. மக்களைக் கூட்டாகக் கொல்லும் ஆயுதங்களைக் தடைசெய்யவேண்டும் என்று கோரும் கடமை சகலநாடுகளுக்கும்உண்டு'' என இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கூறியுள்ளார்.

கடந்த வாரம் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட சுவீடன் பிரதமர் திரு. ஒலோஃப் பால்மேயின் பூதவுடல் நேற்று முன்தினம் ஸ்ரொக்ஹோமில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அந்த வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் ராஜீவ் காந்தி இவ்வாறு கூறினார்.

விரிவான கண்காணிக்கத்தக்க சோதனை தடை ஒப்பந்தம் அணு ஆயுதக் குறைப்புக்கான ஒரு பணியைத் தொடக்கும் என்றும் பிரதமர் கூறினார்.

ஐந்து கண்டங்களின் சமாதான முன்முயற்சிமூலம் தமக்குத் திரு. பால்மேயின் தொடர்பு கிடைத்ததாக ஞாபகமூட்டிய திரு ராஜீவ் காந்தி ''மறைந்த பிரதமர் திரு. பால்மே 1984 ம்ஆண்டு மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடனும் வேறு நான்கு உலகத் தலைவர்களுடனும் இணைந்து அணு ஆயுதங்களை உருவாக்கிப் பரிசோதனை நடத்தும் அழிவு நடவடிக்கைகளைத் தடைசெய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்'' என்றும் கூறினார்.

அணு ஆயுதக் குறைப்புக்காக புதுடில்லி மாநாட்டில் கலந்து கொண்ட ஆறுநாடுகளின் தலைவர்களும் மறைந்த பிரதமர் திரு. பால்மேயின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டதுடன் ஆயுதக்குறைப்புச் சம்பந்தமாக இன்னுமொரு உச்சிமாநாட்டை நடத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர்.

தமது முன்னைய செயல்களுக்கு அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய இரு வல்லரசுகளும் அனுப்பிய பதிலை மீண்டும் பரிசோதிக்கப் போவதாகவும் அத்தலைவர்கள் தெரிவித்தனர். (ரா)

## ஹோட்டல் இடிந்து வீழ்ந்தது பலர் பலி; பலர் காயம்!

[சிங்கப்பூர்]

சிங்கப்பூரில் பயணிகள் தங்கும் ஆறுமாடி ஹோட்டல் ஒன்று இடிந்து வீழ்ந்துள்ளது இந்த விபத்திஞல் பலர் லியாகியிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

இந்த விபத்தில் சுமார் 300 பேர் சிக்கியிருக்கலாம் என்று முன்னர் கூறப்பட்டபோதும், பிந்திய செய்திகளின்படி சிக்குண்டவர்களின் எண்ணிக்கை 100ஆகும் என்று கூறப்படுகிறது.

''கிரேன்''களின் உதவியுடன் மீட்பு வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுவருவதுடன் இதுவரை ஒன்பது பேர் மீட்கப்பட்டுள்ளதுடன் இரண்டு சடலங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

ஹோட்டலின் எஞ்சிய பகுதிகள் மீண்டும் இடிந்து உயிர் தப்பியவர்களின் உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சத்தால் மீட்புப் பணிகள் யாவும் மிகவும் அமைதியான முறையிலேயே நடைபெற்று வருகிறது,

ஹோட்டலின் இடிபாட்டுக்கான காரணம் இதுவரை தெரியாதபோதும்; விபத்தில் சிக்குண்டவர்களில் பெரும்பாலானேர் இந்தியர்கள் என்று கூறப்படுகிறது. [ரா]

## "விவேகானந்தரின் சரித்திரத்தையும், சொற்பொழிவையும் அனைவரும் படிக்க வேண்டும்"

— சுவாமி சித்ரூபானந்தா

(யாழ்ப்பாணம்)

''ஆன்மீகம் இருந்தால் தான் கட்டுப்பாடான சமூக அமைப்பு உருவாக முடியும். எல்லோரும் விவேகானந்தரின் சரித்திரத்தையும். அவரது சொற்பொழிவுகளையும் கட்டாயம் படிக்க வேண்டும். சந்தேகங்கள்பலவற்றுக்கும் அங்கு விடையுள்ளது'' இவ்வாறு ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 151 வது ஜெயந்தியையொட்டி திருநெல்வேலி ராமகிருஷ்ணலயம் நடத்திய பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய சுவாமி சித்ரூபானந்தா கூறினர்

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில்...''ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஷர் ஓர் அவதார புருசர். அவர் காளியை நிதர்சனமாகக் கண்டு பேசி

(7 ம் பக்கம் பார்க்க)

**மணி வாக்கு**

மற்றவன் நல்லவன் என்ற நம்பிக்கை கொண்ட ஒருவன் தானே நல்லவன் என்பதை நிரூபிக்கின்றான்.

— மொன்டேன்

# நமது நோக்கு

## உலகெங்கிலும் காணமுடியாத கொடுமை

இலங்கை அரசின் பாதுகாப்பில் ஓடும் ரெயிலில், இறைவனை நினைத்துக் கொண்டு உயிரைப்பணயம் வைக்கும் யாழ்ப்பாண பயணிகளுக்கு ஏற்பட்ட இன்றைய விபத்து யாரால் ஏற்பட்டது?

பயங்கரவாத அடியும் பதிலடியும் என்ற தொடர் நாடகத்தில் யார் கதாநாயகர், அழிவு எத்தன்மையது, முடிவு எவ்வாறிருக்குமென்று எவராலும் மதிப்பிடமுடியாது. அமைதியான சூழ்நிலையில் மக்கள் வாழ்கின்றனர் என்பதே பேச்சு; அது எந்த நேரத்திலும் எவருக்கும் அழிவை உண்டாக்கும் மர்மமுடையதென்பதே உண்மை.

லெபனன் போன்ற நாடுகளில் தினசரி யுத்தம், பயங்கரவாதக்கடத்தல் போன்ற போருக்குரிய கொடுமைகள் மலிந்திருக்கின்றன.

இலங்கை அந்த நாடு போன்ற நிலையில் இருக்கின்றதா? நாலாபக்கத்திலிருந்தும் வரும் உலக தலைவர்கள் வரவேற்கப்படுகிறார்கள் மாநாடுகள் - மனித உரிமைக் கருத்தரங்குகள் உட்பட சர்வதேச- கருத்தரங்குகள், சர்வதேச வர்த்தக தொழில்நுட்ப விஞ்ஞான உடன்படிக்கைகள்- இவைபோன்ற சமாதான வாழ்வுக்குரிய பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் சாதாரணம்.

இந்தச் சூழ்நிலையில் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் மக்கள் இலங்கை ராணுவத்தின், திறமையற்ற தீமைகளுக்கு தினசரி பலியாகின்றனர்.

எந்த நேரத்தில், எங்கு இலங்கை ராணுவத்துக்கு கண்ணிவெடி காத்திருக்கிறது என்று எவராலும் கணிக்கமுடியாது; சுமார் மூன்று வருடகாலத்தில் உலகெங்கும் தடவிவந்த பாதுகாப்பு அமைச்சரும்; அவருடைய சகாக்களும்கண்ணிவெடிக்கு மருந்து காணமுடியவில்லை.

எனவே இந்தப் போர் முறைக்கு என்ன பதில்? நவீன ஆயுதங்கள், படைகள், ஹெலிகொப்டர்கள், போர் விமானங்கள், வெளிநாட்டு விமானம் ஓட்டும் நிபுணர்கள்- இவையாவும் வந்திறங்கித் தொழில் புரிகின்றன.

தொழில் என்ன? வடக்கிலும் கிழக்கிலும் வாழும் பொதுமக்கள், அன்று உழைத்து அன்று வாழும் மீனவ குடும்பங்கள், ஏழை விவசாயிகள்- வியாபார நிலையங்கள் இவற்றை நடத்தும் சொந்தக்காரச் சிப்பந்திகள், இன்னும் இவர்களைப் போன்ற நிராயுதபாணிகள் எவரையும் எந்த நேரத்திலும் கடலில், மண்ணில், விண்ணில் இருந்து தாக்கி அழித்தல்- உடைமைகளைக் கொள்ளையடித்தல் கோழைத்தனத்தின் கொடியநிலை.

தமிழர்கள் வாழும் பல இடங்கள் இன்று வெளியாக்கப்பட்டன. அங்கு வாழ்ந்தவர்கள், ஆயிரக்கணக்கில் அழிந்ததும், பல்லாயிரக்கணக்கில் அகதிகளாக பட்டினியால் வாடுவதுமே இலங்கை ராணுவத்தின் இன்றைய இணையற்ற சாதனை.

ராணுவத் தீர்வு வடக்கு வீதிக்கு வந்து விட்டதா?

தமிழர் பயங்கரவாதம் மண் கவ்விவிட்டதா?

தமிழர்களை இனங்கண்டு தாக்கிக் கொல்வது இனக்கொலை அல்லவா?

பத்துமாதங்களில் 2,587 பேர் கொல்லப்பட்டது உண்மையானால் அது இனப்படுகொலையன்றி வேறு என்ன?

அதனை அவ்வாறு கூறிய தேசியவெளிவிவகாரச் செயலாளர் பகத் பற்றி பக்கம் பக்கமாய் எழுதி, வாய்வந்தவாறு பேசிவிட்டால் உலகம் அதனை இனக்கொலையென்று கொள்ளாது விடுமா?

நெருப்புக் கோழி தனது தலையை மணலில் புதைத்துவிட்டு தன்னை யாரும் காணவில்லையென்று தடுமாறுவது போல இன்றைய இலங்கை அரசுதமிழ்மக்கள் மேல் இத்தனை நிட்டூரங்களை நீண்டகாலமாகப் புரிந்து வந்தும் கண்டமிச்சம் ஒன்றுமில்லை.

நாட்டில். எப் பகுதியிலாவதுஅரசு அஞ்சும் 'பயங்கரவாதம்' இல்லாத நிலை இருப்பதாக நாமறியவில்லை.

தமிழர்களுக்கு இந்தநாட்டில் நிரந்தர உரிமைபலம் அழிப்தில்லையென்றதீவிரவாதம் சிங்கள பௌத்த தீவிரவாதிகளுக்குஇருந்தபோதும் இந்தப்பிடிவாதத்தை செயலில் நிறைவேற்றும் ஆற்றல் என்றுமே கிடைக்காதென்பதை உலக அபிப்பிராயம் எடுத்துரைக்கிறது.

தமிழப்பயங்கரவாதிகளுக்கு நிபந்தனை விதித்து காலம் தாழ்த்தாது எவ்வித நிபந்தனையுமின்றி அரசு ராணுவத்தை தமிழ்ப்பகுதியிலிருந்து உடனடியாகத் திருப்பி அழைத்தல்வேண்டும். இந்த நிலையில் தமிழ் போராளிகள் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைக்க தமிழ் சமூகம் அவர்களைக் கட்டுப்படுத்த முன்வரும்.

### வகுப்புகள் பகிஷ்கரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு விபுலானந்தா இசை நடனக்கல்லூரி மாணவிகள் கந்தவாரம் தொடக்கம் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து வகுப்புக்களைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

இறுதியாண்டுப்பரீட்சை நடைபெறுவதற்கு முறைப்படி ஒரு மாதகால அவகாசம் வழங்கத்தவறியமை; கல்லூரியில் தளபாடங்கள், கட்டிடங்கள், விரிவுரையாளர் பற்றாக்குறை ஆயன நிவர்த்தி செய்யப்படாமை; விரிவுரையாளர்களுக்கும் பெற்றோர்களுக்கு மிடையே நல்லுறவு ஏற்படுத்தப்படாதது.

இம் மூன்று குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்து மாணவர்கள் வகுப்புக்களைப்பகிஷ்கரித்து வருகின்றனர்.

இந்த இசை - நடனக் கல்லூரியில் நாடெங்கிலுமிருந்து 80 மாணவிகள் இசை - நடனம் பயின்றுவருவது குறிப்பிடத்தக்கது, (மா)

★ உலக அரசியல் அரங்கு — அரசியல் அவதானி

# கூட்டிணைந்த முதலாளித்துவம்

## உலக சமாதானத்துக்கு உதவுமா?

### 16 மாதங்களில் இரு உலகத் தலைவர்கள் 'சரி'! பாமிக்குப்பின் யார்?

## நவீன ஆயுத உற்பத்தி விற்பனை ஒழிக்கப் பட்டால் சமாதானத்துக்கு வழி ஏது?

### சுவீடன்

அணுஆயுதப் போட்டியை ஒழிக்க, ஆயுதப்பரீட்சை உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென்ற கோரிக்கை விடுத்த ஆறு சமாதான வீரர்களில் பெருந் தலைவரான சுவீடிஸ் பிரதமரின் கொலை அகில உலகிலும் பரபரப்பையும் கவலையையும் ஏற்படுத்திவிட்டது.

தலைநகராகிய ஸ்டொக்கோமில் அன்னாரின் பூதவுடலுக்குரிய அஞ்சலிக் கிரியைகள் சிறப்பாக நடைபெற்றன. இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, முன்னைநாள் மேற்கு ஜேர்மன் தலைவர் வில்லி பிரான்ட், ஸிம்பாவே ஜனாதிபதி முகாபே உட்பட பல உலகத் தலைவர்கள் மறைந்த பிரதமரின் இலட்சியங்களைப் போற்றிப் புகழ்ந்தனர்.

அணு ஆயுத பரீட்சை வருகிற ரீகன்- கொர்பசேவ் உச்சியாநாடு வரைக்கும் நிறுத்தப்படவேண்டுமென்ற வேண்டுகோளுக்கு என்ன விடை கிடைத்தது? ஸ்டோக்கோமில் இடம்பெற்றசோகக் காட்சி உலகப் பொதுமக்களின் வஞ்சனையற்ற அபிலாஷைகளை வெளிப்படுத்தும் கண்ணீர் அஞ்சலி; ஆனால் வல்லரசுகள், முதலாளித்துவ நாடுகள் அவற்றின் 'கையாட்கள்' சமாதானம் என்ற இலட்சியத்துக்கு ஒத்துழைக்கின்றனரா?

### வாஷிங்டன்

ஜனாதிபதி ரீகன் இந்தக் கோரிக்கையை உடனடியாக நிராகரித்து விட்டார். அதற்கடுத்தாற்போல, பிரிட்டிஷ்பிரதமர் தாட்சர் 'அப்படியேயாகுக' என்று விட்டார். பிரெஞ்சு சோஷலிச ஜனாதிபதி மித்தரானும் அதே வழியிலிருக்கிறார்.

### சீனா

சீனா தெளிவாக விடையளிக்காத போதும், இக்கட்டத்தில் சேர்ந்த ஒரே ஒரு மார்க்ஸிய வாத நாடாக இருந்தாலும், இனிவரும் தொழில் நுட்பயுகத்தில் நம்பிக்கை கொண்டிருப்பதால் அதுவும் அமெரிக்கா வழி செல்வதில் அதிசயம் இல்லை; ரஷ்யாவின் எதிர்ப்பைச் சமாளிக்க எதிர்க்கட்சியுடன் சேர்வது உசிதமென நினைக்காது. எனவே ஐந்தாவதாக அடுத்த வல்லரசான ரஷ்யா இக் கோரிக்கைக்கு ஆதரவளிப்பதோடு நில்லாது தான் தனியேயாவது இதனை நிறைவேற்றுவேன் என்று கங்கணங்கட்டுகிறது.

இது ஏனைய அணு ஆயுத நாடுகளுக்கு சந்தேகம் அளிக்கிறது. ரஷ்யாவின் இந்த நிலையே வாஷிங்டன் எதிர்ப்பிற்கு உறுதியளிக்கும்; இது ஒருகம்மியூனிஸ்ட் தந்திரத்தின் அமைப்பு யாரிடம் கூடிய 'ஸ்டொக்' இருக்கிறதென்பதை அறிய எடுக்கும் தந்திரோபாயம் என்பதே அமெரிக்காவின் கருத்து. ஜனாதிபதி ரீகனுக்கு ஒருபடி மேலே நின்று அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சு செயலாளர் ஜெனரல் வென்பேகர் விடையளிப்பதில் முந்துகின்றார். ''அணுஆயுதங்கள் கைவசம்' இருப்பின் அவற்றை ஒழிக்கும் வரை, பரீட்சை அவசியம், அதுபற்றி முடிவில்லாத நிலையில் பரீட்சை ஒழிப்பதில் என்ன அர்த்தம்,' என்று கிண்டல் செய்கிறார்.

### ஸிம்பாவே

மூன்றும் உலக இயக்கத்தின் அடுத்த மாநாடு ஸிம்பாவேயில் ஜனாதிபதி முகாபேயின் தலைமையில் நடைபெறவுள்ளது.

மூன்றும் உலகம் அன்று ''அணிசேரா நாடுகள்'' என்ற அமைப்புக்கு அர்த்தம் வழங்கியவர்கள் இந்தியாவின் பிரதமர் நேருவும், யுகோசிலாவிய முன்னாள் ஜனாதிபதி மார்ஷல் ரிற்றோவும்செல்வநாடுகள்வல்லரசுகள் உண்டாக்க வல்லபிரிவினைகளையும் பொருளாதார போட்டியால் உருவெடுக்கும் போர்களையும் கருத்தில் கொண்டுதான், சற்றே விலகித் தங்கள் வறுமையை ஒழித்து சுரண்டப்பட்ட அடிமை நாடுகள் தலையெடுக்க வேண்டுமென்ற பெருநோக்கைக் கொண்டு கூட்டப்பட்டதே 'என் ஏ எம்'

இன்று இந்த மாநாட்டில் உள்ள நாடுகள் சில செல்வ நாடுகள்: இருப்பினும் இந்த அணியில் தான் தங்களுக்கு விமோசனமென்று எண்ணுகின்றன. இந்த இயக்கம் எவ்வாறு தலையெடுக்கும்? செல்வ நாடுகளின் உதவியை நாடும் ஒரு கூட்டத்தினர், ஆயுதப் பரிகரணம், உலக சமாதானம் என்ற மாபெரும் நோக்கங்களை நிறைவேற்றும் ஆற்றல் பெற்றவர்களா?

### கம்மியூனிஸ்ட் ரஷ்யா

அணிசேரா நாடுகளின் தலைமை தாங்கிவரும் இந்தியாவுடன் நிலைத்த நட்பை விரும்பிபேணும் ரஷ்யா இந்த அணிக்கு எதிர்ப்பில்லை; ஆனல் எவ்வகையில் ஆதரவு அளிக்கும்; சீனாவும் இந்த அணிக்கு அனுதாபம் காட்டுகின்றது ஆனால் இன்று சீனாவுக்கு ரஷ்யாவுடனும் இந்தியாவுடனும் நீண்டகாலப் பிணக்கு நிலவிவருகிறது; இன்றைய சீனகம்மியூனிஸ்ட் கட்சி தனது இலட்சியத்திலிருந்து விலகிவிட்டதா? முதலாளித்துவ நாடுகள் அவ்வாறு மனப்பால் குடித்தபோதும் நாட்டின் வாழ்க்கைநிலையை உயர்த்த, தனது கடும்பிடியைக் கைவிட்டு உலகின் செல்வநாடுகளுடன் ஒத்துழைக்க, அமெரிக்காவின் தொழில்நுட்ப நிபுணத்துவத்தைப் பெற்றுக்கொள்ள ஆசைப்படுகிறது

### ரஷ்ய - சீன பிணக்கு

ரஷ்யசீனப் பிணக்கு உலக அரசியல் விவகாரங்களில் மார்க்ஸிய சித்தாந்தத்துக்கு இடுக்கண் விளைவிக்குமோ வென்பது சந்தேகம். மார்க்ஸிய சித்தாந்தத்தை செவ்வனே செயற்படுத்தும் திறமை நாட்டுக்கு நாடு, காலத்திற்கு கலம் வேறுபட்டிருப்பதைக்காணலாம் ஆனல் சோஷலிசம் என்ற சொல்லையே அருவருக்கும் முதலாளித்துவ அமெரிக்கா இன்று தனிப்பட்டு நிற்கவில்லை

### இரு வேறுஉலகம்?

அமெரிக்காவின் தலைமையில் அமைந்திருக்கும் முதலாளித்துவ நாடுகள், கம்மியூனிஸ்டி ரஷ்யாவின் தலைமையில் கூடியிருக்கும் சோஷலிச நாடுகள் என்ற வரையறை இன்று தெளிவாகவில்லை; வார்சோ ஒப்பந்தம் நேட்டோ ஒப்பந்தம் குறிப்பிட்ட அளவிற்கே செயற்படுகின்றது.

### மூன்றும் உலக நாடுகள்

அமெரிக்காவிலும், உலக வங்கியிலும், சர்வதேசநிதி அமைப்பிலும், இன்னும் பல செல்வநாடுகளின் உதவியிலும் ஒத்தாசையிலும் சரணடைந்திருக்கும் மூன்றும் உலக வறியநடுகள், அவற்றின் ஏவல் பேய்கள் என்பதில் அதிக தவறில்லை.

### 'ஆசியா'

தென்கிழக்காகிய நாடுகள் ஒருங்கேசேர்ந்து தொழிற்படும் 'ஆசியான்' நிறுவனம். மக்கள் ஆட்சிகளைக்கொண்ட ஜனநாயக நாடுகள் நிறுவனம் என்று கொள்வதற்கில்லை

பொதுமக்களைத் தவிர்த்த கூட்டாயமைந்த முதலாளித்துவ அரசையே உருவாக்கும் பணியில் இந்நாடுகள் ஈடுபட்டிருக்கின்றன இரட்டைப் பொருளாதாரம் தலையெடுத்தது, அடிமட்டவர்க்கம், கீழ் மத்திய வர்க்கம், அரசியல் சிந்தனைகொண்ட மத்தியவர்க்கம் ஆகியோரிடையேயும் பெரும் அமைதியின்மையைஉருவாக்குகிறது.

இந்நாடுகள் அமெரிக்காவின் தலைமையை முற்றாக ஏற்கின்றன. தத்தம் அரசுக்கும் கூட்டிணைந்த முதலாளித்துவத்திற்கும் உண்டான இணைப்பேயன்றி உள்ளூர் முதலாளிகளுக்கும் வெளிநாட் மூலதனத்திற்கும் உண்டான இணைப்பு இல்லையென்பதை அறியவேண்டும்.

### தெற்காசிய நாடுகள்

இலங்கை, இந்தியா போன்ற தெற்காசிய நடுகள் அமெரிக்க முதலாளித்துவத்திலும், உலக நிதி நிறுவனங்களிலும் தங்கியிருப்பதால் தத்தம் நாட்டின் அபிவிருத்தி அந்த நிலவும் ஆட்சிமுறையைப் பெரிதும் பாதிக்கின்றது.

இந்தியாவின் போக்கு தனித்துவமானது. ரஷ்யநட்பும் அமெரிக்காவுக்கு எதிர்ப்பில்லாத கொள்கையும், நாட்டின் பலமும் பெருமையும், அமெரிக்கமுதலாளித்துவத்துக்கு அடி வருட இடமளிப்பதில்லை; இருப்பினும் வல்லரசுகளின் ஊடுருவல் ஆட்சியின் புனித அணிசேராமைக்கு பங்கம் விளைத்து நிலைகுலைக்கமுயல்கின்றன.

### இலங்கை

இரட்டைப் பொருளாதாரம் இந்த நாட்டின் உள்ளூர் முதலாளிகளுக்கு வெளிநாடட்டு மூலதனத்துக்கு உண்டான இணைப்பு போல் தோன்றும்.

(5ம் பக்கம் பார்க்க)

## கூட்டிணைந்த....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் உள்ளூர் தொழில்கள், வியாபார நடவடிக்கைகள் குன்றி வருகின்றன. சில புதுப்பணக்காரர் பெருக்கமடைய பொதுமக்கள் நலிவுறுகின்றனர். இதனால் எழும் பிரச்னைகளைத் திருப்ப மக்கள் கிளர்ச்சி செய்யாது தடுக்க இனம், மொழி, பண்பாடு போன்ற சக்திமிக்க உணர்வுகள் தூண்டப்படுகின்றன.

கூலிப்படைகளை, சமூகவிரோத குற்றவாளிகளை பயன்படுத்தி, தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து என்ற ஒருவகை உள்நாட்டுப்போரைத்தூண்ட இவ்வித அரசியல் இடமளிக்கிறது.

பயங்கரவாதம், என்பதற்கெதிராக கடுமையான சட்டங்கள் அவைஉருவாக்கியிருக்கும் இன்றைய அழிவுநிலை, அமைதியின்மை - இவற்றை நாட்டு மக்கள் செவ்வனேஇதனைப் புரியும்வரை பொதுமக்கள் புரட்சிநிலை தாமதமாகும்.


### கடைசிநேர வரிவிளம்பரம்

### வகுப்புகள்

வயறிங், வெல்டிங், ரேடியோ, ரீவி, மோட்டார் மெக்கானசம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து - இரண்டு புதிய பிரிவுகள் 19-03-86, 21-03-86 ஆரம்பமாகின்றன. முதலிற் சேருபவருக்கு குறைந்த கட்டணம் அறவிடப்படும். சான்றிதழ் பெறுமதியானது VISPA ENGINEERING, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். A 1279

### விற்பனைக்கு

இந்தியன் பழைய ஓடு 2000, கதவு, நிலை யன்னல் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: க. சிவா, இல. 9, மாட்டீன் லேன், யாழ்ப்பாணம். C 1277

எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30, 9-15
விஜயகாந்-விஜி
**புதுயுகம்**

2வது வாரம்
19ம் திகதி மட்டும்
LIDO Jaffna
10-30, 2-30, 4-30, 6-30
THE STORY OF THE DOLLS
Colour
(Strictly for Adults)

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
சிவகுமார்; மோகன்
அம்பிகா கவுண்டமணி
நடித்த
**நான் பாடும் பாடல்**
(கலர்)


## நாகபூஷணி ஆலய நித்திய பூசைகள் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நயினாதீவில் இடம்பெற்ற அசம்பாவிதங்களைத்தொடர்ந்து நயினாதீவு அருள்மிகு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் தடைப்பட்டிருந்த நித்திய பூசைகள் இன்று திங்கட்கிழமை முதல் நடைபெறுமென மேற்படி ஆலய நிர்வாக சபைத் தலைவர் திரு. த. குலசேகரம் தெரிவித்துள்ளார்.

புண்ணிய பிராயச்சித்தாதிகளும், சம்புரோக்ஷண கும்பாபிஷேகமும் நிறைவேற்றப்படும். இதன் பின்பு வழமைபோல் நித்திய பூசைகளும், நைவேத்திய ஆராதனைகளும் தவறாது நடைபெறும். திங்கட்கிழமை காலை இடபலக்கின சுபமுகூர்த்தத்தில் சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் நடைபெறும்.

சைவப்பெருமக்கள் அம்பிகையை ஆராதித்து வழிபாடுகள் நேர்த்திக்கடன் முதலியவற்றை வழமைபோல் செய்யலாம்.

மேலும், இதேதினம் முதல் நயினையிலுள்ள ஏனைய கோயில்களிலும் பூசைகள் நடைபெறும். பிரயாண ஒழுங்குகளும் வழமைபோல் நடைபெறும் இவ்வாறு தலைவர் தெரிவிக்கிறார். [ஐ]

## துப்பாக்கி -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளார்

இச்சம்பவத்தில் மேலும் பத்துப்பேர் மரணமாகி உள்ளனர் எனவும் அவர்களது சடலங்களை 'டராக்டர்' பெட்டியில் தாங்கள் ஏற்றிவிட்டதாகவும் இச்சம்பவத்தின் போது வயலில் வேலைசெய்து தப்பிய விவசாயிகள் தெரிவித்தனர்.

'ட்ராக்டர்' ஒன்றில்வயலை நோக்கி வந்துகொண்டிருந்த போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டிலே இவர்கள் மரணமானார்கள் எனவும் மேலும் தெரிவித்தனர்.

ட்ராக்டரிலிருந்து இவர்கள் இறங்கி ஓடும்போது பலருக்கு சூடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து கிளிநொச்சி நகரில் அநேக கவசவாகனங்கள் நிலைகொண்டிருந்தன. இராணுவத்தினர் வீதிகளில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தனர் கிளிநொச்சி பதற்றநிலையில் உள்ளது.

## வலிகாமம்---

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

போகிறது என்ற ஏக்கத்துடனும் இம்மக்கள் வெளியேறுகிறார்கள்.

மயிலிட்டி வடக்குப் பகுதியில் விமான நிலையப் பகுதிக்குச் சமீபமாக வாழ்ந்த 53 குடும்பங்கள் ஏற்கனவேவெளியேற வேண்டுமென உத்தரவு விடுக்கப்பட்டதும் பிரஜைகள் குழுக்கள் மூலம் இராணுவ இணைப்பதிகாரிக்கு மக்கள் முறையீடு செய்ததும் தெரிந்ததே. அத்துடன் இக்குடும்பங்கள் மீண்டும் பயமுறுத்தப்பட்டு சிலர் தாக்குதலுக்கும் ஆளானார்களாம். இதன் காரணமாக அவர்கள் அவ்விடங்களைவிட்டு வெளியேறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இப்பகுதிகளில் இருந்து வெளியேறிய மக்கள் மாவிட்டபுரம் வீதியாலும், காங்கேசன்துறை வீதியாலும் வேறுஇடங்களை நாடிச் செல்வதைக்காணக் கூடியதாகவுள்ளது.

பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை, ஊறணி கரையோரப்பகுதியிலும் பதற்றம் ஏற்பட்டு மக்கள் அங்கிருந்தும் வெளியேறிவருகின்றனர் இடம்பெயரும் மக்கள் தமது உறவினர்கள், தெரிந்தவர்கள் வீடுகளிலும், ஆலயங்கள், தேவாலயங்களிலும் தஞ்சம் அடைந்துள்ளனர். வலி. வடக்குப் பகுதி பதற்றமும், பரபரப்பும் கூடிய பிரதேசமாக விளங்குகிறது.

## வல்வைச் சம்பவம்....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லில் ஆறு பேர் பலியானதாக 'தமிழீழ விடுதலைப் புலிகள்' அறிவித்துள்ளன.

''வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து 500 யார் தூரத்தில் 35 இராணுவத்தினர் படுத்தவாறு பதுங்கியிருந்தனர். இவர்கள் மீது எமது வீரர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 6 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே பலியாயினர். பலர் படுகாயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து பல மணி நேரமாக இராணுவத்தினர் மோட்டார் 'ஷெல்' தாக்குதல் மேற்கொண்டனர்'' என்று 'தமிழீழ விடுதலைப் புலிகள்' நேற்று மாலை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளன.

## தமிழ்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பொதுக்கூட்டங்களிலும் எனது ஒத்துழைப்பை அரசு கோருகிறது. இனப்பிரச்னைத் தீர்வுக்கு என்ன யோசனைகளை நான் வைத்திருப்பதாகக் கேட்கிறார்கள். இதற்கான பதிலை நான் அவர்களுக்குக் கூறவிரும்பவில்லை. எனதுபதில்கள் யாவும் பொதுமேடைகளுக்கு கட்டுப்பட்டதாகவே இருக்கும்'' என்றும் அவர் கூறினார்.

## அடகுவைத்தோர் சங்கம் இன்றுமுதல்மீண்டும் மறியல்

### கொழும்பு செல்வதில்லை என்று முடிவு

(யாழ்ப்பாணம்)

கொழும்புசென்று நகைகளை மீளப்பெறுவதை முற்றாக நிராகரித்து நகைகளை இப்பிரதேசத்தில் பெற்றுக்கொள்ள இன்று முதல் அடகுவைத்த வாடிக்கையாளர்கள் வங்கிக் கிளைகளுக்கு முன்பாக காலை 7-30 மணி தொடக்கம் மறியற் போராட்டம் நடத்துவதென அடகுவைத்தோர் சங்கம் நேற்றுத் தீர்மானித்துள்ளது.

மக்கள் வங்கி நகைகளைக் கொழும்பில்வைத்து வாடிக்கையாளர்களுக்கு மீளளிப்பது சம்பந்தமான விஷயத்தை ஆராய்வதற்காக நேற்று யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் அடகுவைத்தோர் சங்கப் பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் திரு. அரசரத்தினம் தலைமையில் நடந்தபோது இவ்வாறு முடிவுசெய்யப்பட்டது.

பிராந்திய அலுவலகம் உட்பட வடபகுதி சகல மக்கள்வங்கிக் கிளைகளின்முன்பாக இன்று முதல் மறியற் போராட்டம் நடத்துவதென்றும், கொழும்பு சென்று நகைகளைப் பெறுவதற்குக் கடிதமூலம் சம்மதம் தெரிவித்தவர்கள் அக்கடிதத்தை வாபஸ்பெறுவதென்றும இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கூட்டிடத்தில் இதுவரை காலமும் சங்கம் மேற்கொண்டுவந்த நடவடிக்கைகள்பற்றி வாடிக்கையாளர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டதுடன் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றியும் ஆராயப்பட்டது.

கொழும்பு சென்றுநகைகளை மீளப்பெறுவதில் உள்ள அசௌகரியங்கள், பாதுகாப்பின்மை, வாடிக்கையாளர்களின் நடைமுறைச் சிக்கல்கள் போன்ற விடயங்களைச் சங்கப் பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர்,

வாடிக்கையாளர்கள் சார்பில் கருத்துரை வழங்கியவர்கள் கொழும்பு சென்று நகைகளை மீளப்பெறுவதை முற்றாக நிராகரித்ததோடு, ஒரு விரிவுபடுத்தப்பட்ட தொடர்ச்சியான ஐக்கியமான போராட்டத்தின் மூலமே எமது நகைகளை எமது பிரதேசத்தில் வைத்துப் பெற்றுக் கொள்ள முடியுமென்று விளக்கிக் கூறினர்.

கொழும்பு சென்று நகைகளை மீளப் பெறுவது சம்பந்தமான பொதுமக்களின் கருத்தைஅறிவதற்காக எடுக்கப்பட்டஅபிப்பிராய வாக்கெடுப்பில் எவருமே கொழும்பு செல்வதற்கு முன்வரவில்லை.

இதுவரை பணம் செலுத்தாத வாடிக்கையாளர்களை சங்கம் அறிவித்தல் விடுக்கும் வரை பணம் செலுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்வது என்றும், பாதிக்கப்பட்ட அனைத்து வாடிக்கையாளரின் பூரண ஒத்துழைப்புடன் விரிவுபடுத்தப்பட்ட ஒரு மறியல் போராட்டத்தின் மூலம் நகைகளை இப் பிரதேசத்திலேயே பெற்றுக் கொடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ந்து எல்லா வங்கிக் கிளைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய முறையில் ஒரு நடவடிக்கைக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டு அதன் தீர்மானத்திற்கமைய இன்று முதல் அடகுவைத்த வாடிக்கையாளர்கள் அனைவரையும் அந்தந்த வங்கிமுன் காலை 7-30ற்கு கூடி மறியல் போராட்டத்தின் மூலம் வங்கிவேலைகளை ஸ்தம்பிதமடையச் செய்யும்படி சங்கம் கேட்டுக்கொள்கின்றது என்ற தீர்மானமும் நிறைவேற்றியது. [க]

## வீடுகள்...

( 1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேறுமாறு இராணுவத்தினர் உத்தரவிட்டனர்.

இதையடுத்து மயிலிட்டி வடக்கு பிரஜைகள்குழு மயிலிட்டிக்கரைப் பிரஜைகள் குழு ஆகியன வடபகுதி இராணுவ இணைப்பதிகாரியைச் சந்தித்து இக்குடும்பங்களின் அவல நிலையை எடுத்துக் கூறியதையடுத்து இக்குடும்பங்கள் இணைப்பதிகாரியை சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்ட போதும் சந்திப்புக்குஏற்பாடு செய்த தினத்தில் அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டதால்சந்திப்பு நிகழவில்லை அத்துடன் பயமுறுத்தல் தொடர்ந்தமையால் அந்தக் குடும்பங்கள் வீடுகளைவிட்டு வெளியேறின.

அவர்கள் வெளியேறிய பின்னர் வீடுகள் சேதமாக்கப்பட்டு அங்கிருந்த உடைமைகளும் அடித்து நொருக்கப்பட்டனவாம் அத்துடன் வீடுகளைப் பார்வையிடச் சென்றவர்கள் தாக்குதலுக்கும் உள்ளானார்களாம்

இதுகுறித்துத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளையடுத்து மயிலிட்டி வடக்குப் பிரஜைகள் குழு யாழ் அரச அதிபர் கொழும்பிலிருந்து திரும்பியதும் அவரைச் சந்தித்து ஆவன செய்யுமாறு வலியுறுத்தவிருப்பதாகப் பிரஜைகள் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

வீடுகள், உடைமைகள், விவசாயப் பயிர்களைவிட்டு நிர்க்கதிக்குள்ளாகியுள்ள இக்குடும்பங்களுக்கு உதவ முன்வருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## தமிழரை...

(1 ம பக்கத் தொடர்ச்சி)

ழகத்துக்குச் சென்று திரும்பியபோது இனப்பிரச்னை விவகாரம் நம்பிக்கை தருவதாயிருந்தது. இப்போது நிலைமை மிக மோசமகிவிட்டது'' என்றார்.

ஜனாப் எம் ஏ சரீம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

ஜனாப் எம் ஏ. அப்துல் மஜீத் உரையாற்றுகையில்; ''முஸ்லிம்களின் தாய்மொழி தமிழ். போதனா மொழி தமிழ் ஒன்றுதிரண்டு உரிமைகளுக்காகப் போராடவேண்டும். வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குச் செல்வதென்பது வெளிநாடுகளுக்குச் செல்வது போன்றாகிவிட்டது'' என்றார்.

## பொதுசன...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

### 10 லட்சம் கையெழுத்து

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு அனுப்பவிருக்கும் மகஜருடன் அனுப்புவதற்காக சேர்க்கப்பட்ட பத்து லட்சம் கையெழுத்து பட்டியலை யாழ். மாவட்டத்தில் முடித்துவைத்து அம்மகஜரை அனுப்பும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதென முடிவுசெய்யப்பட்டது.

பிரஜைகள்குழு பிரதிநிதிகள், கையெழுத்துப் பட்டியல்களை நேற்று ஒப்படைத்தார்கள்.

பிரஜைகள்குழு பிரதிநிதிகள் ஒவ்வொரு மாதமும், ஒன்றவிட்ட புதன்கிழமைகளில பிற்பகல் ஒருமணிக்கு யாழ். நகரிலுள்ள பிரஜைகள் குழு மணிமனையில் சந்திப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

### மக்கள் பட்டினி

நயினாதீவு சம்பவத்தின்பின் பாடசாலைகளில் ஒருகிழமை மக்களைத் தங்கியிருக்குமாறு அரச அதிகாரிகள் கூறிச் சென்றபின் ஆயுதப்படையினர் மறுநாளேவந்து தங்கள் இல்லங்களுக்கு திரும்பிவிடுமாறு பயமுறுத்தியதால் மக்கள் வீடுகளுக்குச் சென்று உணவின்றிப் பட்டினிகிடந்தார்கள் என்று நயினாதீவிலிருந்து வந்த பிரதிநிதி தெரிவித்தார்.

### பலர் வெளியேற்றம்

மயிலிட்டி பலாலிப் பகுதிகளிலிருந்து கடந்த 3 தினங்களாக மக்கள் அச்சத்தினால் வீடுகளிலிருந்து வெளியேறிக்கொண்டிருப்பதாகவும், முகாமைச்சுற்றியிள்ள பகுதிகளில் பயிர்செய்யப்பட்ட சுமார் 30 லட்சம் ரூபா பெறுமதியான வெங்காயத்தை அறுவடை செய்யமுடியாத நிலையல மக்கள் வெளியேறிக்கொண்டிருப்பதாகவும், சிறுசிறு சம்பவங்களால் பதற்றும் நிலவிக்கொண்டிருப்பதாகவும் மயிலிட்டியிருந்து வந்த பிரதிநிதி தெரிவித்தார்,

முல்லைத்தீவுப் பகுதிகளில் நடக்கும் வன்முறைச் சம்பவங்கள் உடனுக்குடன் வெளி உலகிற்கு தெரிவதில்லை என்றும் அங்குள்ளவர்கள் சம்பவங்களை உடனுக்குடன் பிரஜைகள் குழுமூலம் இணைப்புக்குழுவிற்கு அறிவிக்கவேண்டும என்று முல்லைத்தீவு பிரதிநிதி கூறினார். (க)


### பிரயாண ஒழுங்குகள்

✶ டுபாய் ✶ கனடா செல்வதற்கு
பிரயாண ஒழுங்குகள் செய்துதரப்படும்.
கனடாவுக்கு பெண்கள் மட்டும் செல்வற்தகுரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். 17-3-86 பிற்பகல் 6-00 மணிக்கிடையில் தொடர்புகொள்ளவும்.
ரஜீவன் ட்ரவல்ஸ், 42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (C1276)
தொலைபேசி: 23665.

# 'பண்டா'வைப் பின்பற்ற சிறிமா தயாரா?

## -ஜே. ஆர். கேட்கிறார்

(கொழும்பு)

''பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டதுபோல் வடக்கு- கிழக்கு இணைப்பை ஐ. தே. கட்சி எதிர்க்கிறது''

இவ்வாறு ஜனாதிபதி ஜயவர்த்தன அம்பலாந் தோட்டவில் பொதுக் கூட்ட மொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; ''இந்த ஒப்பந்தத்தில் உள்ள குறிக்கோள்களைப் பின்பற்ற திருமதி பண்டாரநாயக்க தயாராகவுள்ளாரா?'' எனவும் கேட்டார்.

## தையற் பயிற்சி நடைபெறுகிறது

(பச்சிலைப்பள்ளி)

பளை மகா வித்தியாலயத்தில் முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் இவ் ஆண்டு தையற் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. பாடசாலையை விட்டு வெளியேறிய சுமார் ஐம்பது யுவதிகள் இப் பயிற்சியினைப் பெற்று வருகிறார்கள்.

கடந்த ஆண்டு வானொலி திருத்தும் துறையில் பயிற்சியினைப் பெற்றுத் தேறிய பலர் அத்துறையில் வேலை வாய்ப்பினைத் தேடி நன்மையடைந்துள்ளார்கள்.

# 'வளங்கள் சகலரும் பெறவே திட்டங்கள் தீட்டப்படுகின்றன'

[மாவிட்டபுரம்]

''யாழ். மாவட்டத்தில் உள்ள வளங்களை சகலருக்கும் கிடைப்பட வேண்டும் என்ற நோக்குடன் நாம் திட்டங்களை வகுக்கிறோம். எந்த ஒரு பகுதியினரையும் பாதிக்கும் வகையில் திட்டம் தீட்டப்படுவதில்லை. ஆகவே வளங்களை காண்டு நாம் வகுக்கும் திட்டங்களில் சகலரும் கலந்து பயன் பெறவேண்டும்.''

இவ்வாறு யாழ். திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திரு. வி. செ. சுவாமிநாதன் போஷாக்கு பயிற்சி நெறியில் சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்துரையாற்றுகையில் கூறினார்.

திட்டம் செயற்படுதல் அமைச்சின் உணவு ஊட்டச்சத்துப்பிரிவின் சார்பாக யாழ் மாவட்ட திட்டமிடல் பணிமனை தெல்லிப்பளை, அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கங்களின் ஆதரவுடன் 19‘5 ல் நடத்திய உணவு போஷாக்கு பயிற்சி நெறியில் பங்குபற்றி பரீட்சை சித்திபெற்றோருக்குப்பரிசில் வழங்கும் வைபவம் தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் வலி - வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ் இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திரு வி செ. சுவாமிநாதன் மேலும் பேசுகையில்; ''போஷாக்கு சம்பந்தமான பயிற்சி நெறி பெண்களுக்கு பல வருடங்களாக நடாத்தப்பட்டுவருகின்றது. இதன் மூலம் சமுதாயத்தில் போஷாக்கு ஊட்டச்சத்து பற்றிய அறிவை பெரும்பான்மையோர் பெற வாய்ப்புக் கிடைத்துள்ளது'' என்றார்.

தெல்லிப்பளை மாவட்ட வைத்திய அதிகாரி திரு எஸ். கதிரவேற்பிள்ளை தமதுரையில்; ''விவசாயிகள் பயிர்களுக்கு நோய்களைக் கட்டுப்படுத்த கிருமிநாசினிகள் தெளிப்பதனால் காய்கறிகளை இரண்டு, மூன்றுதரம் நீரில் போட்டு நன்கு கழுவியபின்புதான் சமைக்கவேண்டும். இது விடயமாக இங்கு பயிற்சி பெற்ற பெண்கள் கிராமம் கிராமமாக விளங்கப்படுத்த வேண்டும்'' என்றார்.

இதைத்தொடர்ந்து திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. தி. கிருஷ்ணதிலகன் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கினார்

# ஆருளரோ ஐயா!

தமிழன்னை செய்தவந் தன்னு லுதித்த தவமணியை
அமிழ்தன்ன செந்தமிழ்க் காம்பணி யாற்றிய
பாணியைறற்
புகழ்தந்த மட்டுவில் பூத்த கணபதிப் பிள்ளைநலந்
திகழ் சொற் கரசனைத் தாரணி நீத்துத் திகைக்கின்றதே.

சாரன்பி னைந்திணை நூலது தந்த தமிழ்மணியே
சேரருஞ் சைவநற் சித்தாந்த மாய்ந்த சிவமணியே
கூரறி வாளரா மாசிரி யர்க்கோர் குருமணியே
பாரினி லுன்னிடம் பற்றுதக் கார்பண் டிதமணியே.

செ. மயில்வாகனம்.

# நீர்வை சித்திரவேலாயுதர் கும்பாபிஷேகம்

அருட்பெருமையுடன் கோப்பாய் கிராமத்தில் விளங்கும் சித்திரவேலாயுதசுவாமி கோவில் இற்றைக்கு சுமார் 125 ஆண்டுகளுக்கு முன் வடகோவையில் வேலுப்பிள்ளை என்னும் முருக பக்தரால் அமைக்கப்பட்டதாகும். இவர் செல்வந்தராயும் செல்வாக்குடையவராயும் விளங்கினர். இவர் ஏறுமயில் வாகனனின் ஆறுபடைவீடுகளில் ஒன்றாய திருச்செந்தூர் என்னும் திருத்தலத்தின்மீது மாறாத பக்தி கொண்டு வருடந்தோறும் வரும் கந்தசஷ்டி விரதத்தினை அத்தலத்திலேயே அனுட்டிப்பார்.

திரு. வேலுப்பிள்ளை தாம் வாழும் கோப்பாய்க் கிராமத்தில் முருகப் பெருமானுக்கு ஆலயம் இல்லாமையினால் புதிய ஓர் ஆலயம் அமைத்து வழிபாடு இயற்ற விரும்பினர். அக்காலத்தில் இவரின் மனைவி பரகதியடையவே மனைவியின் மாங்கல்யத்தை விற்று வேலாயுதம் வாங்கி ஊரியாட்டி என்ற இடத்தில் அவ்வேலாயுதத்தைத் தாபிக்க ஆவலாயிருந்தார்.

ஆண்டவன் கட்டளையால் வேலுப்பிள்ளை தம் குருக்கள் ஆகிய வேதக் குட்டிக் குருக்களிடம் தன் ஆவலைத் தெரிவித்தார். அந்த இரவே குருக்கள் ஒரு சொப்பனம் கண்டார் நாற்சந்திக்கு மேற்குப் புறத்தே பற்றைகளும் பாறைகளும் ஈச்சமரங்களும்செழித்து வளர்ந்திருப்பதைக் கனவிலே கண்ட குருக்கள் அவ்விடமே கோயிலுக்கு உரிய நிலையம் என்றும் அங்கேயே ஆலயம் அமைக்க வேண்டும் என்றும் அன்பர் வேலுப்பிள்ளைக்கு அறிவுறுத்தினர். வேலுப்பிள்ளை விரைவிலேயே அவ்விடத்தில் சிறு கோயில் கட்டித் தம்முடைய குருவைக் கொண்டே வேலாயுதப் பிரதிஷ்டை செய்வித்து நித்திய பூசைக்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்தார்.

சிலஆண்டுகளில் கோயில் சாந்துக் கட்டிடமாக மாற்றம் பெற்றது பின் 1897-ம் ஆண்டிற் கர்ப்பக்கிருகமும் அர்த்த மண்டபமும் வெள்ளைக்கல்லாலும் அடுத்த இருமண்டபங்களும் வைரவர் கோயிலும் சாந்தினாலும் கட்டப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டன.

சில ஆண்டுகள் கழிந்தபின் மடைப்பள்ளி. களஞ்சியம், கொடித்தம்பம், கொட்டகை, சுற்றுமதில் என்பன கட்டப்பட்டதோடு கோபுரவேலையும் சிலவருடங்களின் பின் நிறைவேறியது. இக்காலத்திலேயே வள்ளிதேவசேனா சமேதரான ஆறுமுகப்பெருமாளின் திருவுருவப் பிரதிஷ்டையும் நிகழ்ந்தது. 1930- ஆம் ஆண்டளவில் கொட்டகை, யாகசாலை, வசந்தமண்டபம் முதலியனவும் கட்டப்பட்டன.

1942 இல் ஷண்முகராலயமும் மகாமண்டபமும் ஸ்நபன மண்டபமும் திருப்பணியாக கட்டி முடிக்கப்பட்டன. விநாயகராலயமும், வைரவராலயமும் கட்டப்பட்டு விநாயகர் பாலசுப்பிரமணியர், முத்துக்குமாரசுவாமி முதலிய திருவுருவங்கள் அடியவர்களின் உபயமாகப் பிரதிஷ்டை செய்ய பட்டன. இக்கோயிலின் மூன்றாவது கும்பாபிஷேகம் 1960-ம் ஆண்டில் நடைபெற்றது.

சித்திரத் தேர்த்திருப்பணிச் சபையின் அயரா முயற்சியால் 1967 இல் தேர்ப்பணியும் பூர்த்தியாகியது 1‍64-ம் ஆண்டளவில் கொடியேற்றத் திருவிழா ஆரம்பமாகியது. வைகாசிப் பூரணையைத் தீர்த்தத்திருவிழாவாகக் கொண்டு பத்து நாட்கள் மகோற்சவம் வருடம் தோறும் நடைபெறுகின்றது.

இவ்வாலயத்தின் நாலாவது கும்பாபிஷேகம் இன்றுநடைபெறுவன் மூலமாக செந்தமிழ்த் தெய்வமாகிய முருகன் அருள் நம்நாட்டில் பெருகி எல்லா நன்மைகளையும் உண்டு பண்ணும் என நம்பி முருகனின் கும்பாபிஷேகவிழாவைக் கண்டு பணிவம்.

- வடகோவை திருப்பதி

## வல்வெட்டியில்—

# 'புலிகள்' கிண்டி எடுத்த வெடிக்காத குண்டு!

(வல்வெட்டித்துறை)

தாவடி சம்பவத்தில் வீசப்பட்டு வெடிக்காத நிலையில் எடுக்கப்பட்ட குண்டிலும் பார்க்க நீளமானதும் நிறையில் கூடியதுமான குண்டு ஒன்று வல்வெட்டியில் நிலத்திலிருந்து கிண்டி எடுக்கப்பட்டது.

கடந்த 2 தினங்களின் முன்னர் வல்வெட்டித்துறைப் பகுதியில் நடைபெற்ற விமானத் தாக்குதலின்போது விமானங்களிலிருந்து வீசப்பட்ட குண்டுகளிலொன்று வல்வெட்டியில் சுமார் 15 அடி ஆழத்தில் வெடிக்காத நிலையில் நிலத்தினுள் புதைந்திருந்தது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் வெகு சிரமப்பட்டு அதனைக் கிண்டி எடுத்தனர்.

சுமார் 68 கிலோ எடையையுடையதும் ஐந்தரையடி நீளமுமான இக் குண்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் இப் பாரிய குண்டினைப் பார்வையிட்டுச் செல்கின்றனர்.

## புதிய நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

நாவலர் சனசமூக நிலையத்தின் இவ்வருட நிர்வாகிகளாபின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு வே. சுந்தரம் உப தலைவர்: திரு இ நவநீதராசா, செயலாளர் திரு கொ. குணசிங்கம், உப செயலாளர்: திரு கு. திரவியநாதன், பொருளாளர்: து அருந்தவராசா, மாணவமன்ற கல்விப் பொறுப்பாளர்: திரு மு. ரவீந்திரன். வேறு 5 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## முன்னாள் அதிபர்

# இராசசுந்தரம் இல்லத்தில் துக்கம் அனுஷ்டித்தனர்

[சுழிபுரம்]

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி முன்னாள் அதிபரும் வெகுசன இயக்கத் தலைவருமான திரு வை, இராசசுந்தரம் சென்ற ஏழுமாதங்களுக்கு முன்னர் இனம் தெரியாத கோஷ்டியினரால் சுழிபுரம் பிரதான வீதியில் வைத்து கடத்திச் செல்லப்பட்டார்.

அவரை விடுவிக்கும்படி பொதுமக்கள் மனைவி உறவினர்கள் வேண்டுதல் விடுத்தும் விடுவிக்கப்படவில்லை இம்மாதம் பன்னிரண்டாம் திகதி வெளியிடப்பட்ட பத்திரிக்கை செய்தியொன்றைத் தொடர்ந்து திரு, வை. இராசசுந்தரம் இல்லத்தில் துக்கம்கொண்டாடப்பட்டது. சுழிபுரம்விக்ரோறியாக்கல்லூரி அதிபர் திரு க. அருணாசலம் தலைமையில் கல்லூரிமாணவர்கள் இராசசுந்தரம இல்லம் சென்று பிரார்த்தனை செய்து அதிபரின் அனுதாப உரையுடன் மௌனம் அனுஷ்டித்தனர். திருமதி வை, இராசசுந்தரத்திற்கு ஆறுதல் அனுதாபம் தெரிவிக்கும் வகையில் பலர் திரண்டிருந்தனர்.

திரு வை. இராசசுந்தரம் சங்கானை ப. நோ. கூ. சங்கம் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை, மனிதஉரிமை வெகுசன இயக்கம் இவை போன்ற பல பொது இயக்கங்களில் இருந்து தொண்டாற்றி வந்தவராவர் இவரை நடு வழியில் வைத்துக் கடத்தியபோது, இவரது மனைவிமக்கள் யாவரும் வெளிநாட்டில் இருந்தார்கள்.

# இணக்கசபை உறுப்பினர் இருவரின் வாகனம் அபேஸ்!

[புலோலி]

துன்னாலை தெற்கு இணக்க சபையின் இரு உறுப்பினர்களின் வாகனங்கள் அவர்களின் வீட்டிக்குள் இரவு வேளையில் புகுந்து கொண்ட ஆயுதம் தாக்கிய இனந்தெரியாத இளைஞர் கோஷ்டியினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரபல வர்த்தகரான திரு. எஸ். சிவராமலிங்கத்தினது காரும், பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கணக்காளரான திரு. எஸ். சோமசுந்தர ஐயரின் மோட்டார் சைக்கிளுமே கடத்திச்செல்லப்பட்ட வாகனங்களாகும்.

இவ் விருவரினதும் வீடுகளுக்குள் இரவு வேளையில் புகுந்து கொண்ட இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய கோஷ்டிகள் இருவரையும் துப்பாக்கி முனையில் பயமுறுத்தியே காரையும், மோட்டார் சைக்கிளையும் கடத்திச் சென்றுள்ளார்கள்.

துன்னாலை தெற்கு இணக்க சபை துன்னாலை பிரஜைகள் குழு போன்ற மக்கள் சேவை நிறுவனங்களின் உறுப்பினர்களாக விருந்து மக்கள் சேவையாற்றும் இவ்விருவரினதும் காரையும், மோட்டார் சைக்கிளையும் கடத்திச் சென்றவர்கள் அவற்றை மீளவும் கையளிக்கும்படி பணிவுடன் கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

# "பொது நூலகங்களைப் பயன்படுத்த வேண்டும்"

[சுண்டுக்குளி]

''வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் தற்போதைய சூழ் நிலையில் தமிழ் மக்களுக்கு இருக்கும் ஒரே சொத்து கல்விதான். ஒரு கட்டிடத்தை கட்டி எழுப்பி திறந்து வைத்தால் மட்டும் போதாது. இங்குள்ள மக்கள் அனைவரும் இந்நூல் நிலையத்திற்கு வந்து ஒவ்வொரு நூல்களையும் படித்து பயனடைய வேண்டும்''

இவ்வாறு நவாலி மேற்கு கற்கேணியடியில் புதிதாக நிறுவப்பட்ட சனசமூக நிலையததின் திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நவாலி மகா வித்தியாலய உதவி ஆசிரியர் திரு. எஸ். சர்மா கூறினார்.

திரு கணேசு தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. சர்மா தொடர்ந்து பேசுகையில்: நெருக்கடியான சூழ் நிலையிலும் இரவு பகல் என்று பாராது இந்நிலையத்தைக் கட்டியெழுப்பிய இளைஞர்களின் முன் மாதிரியை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது'' என்றார்.

நவாலி கிராம சேவையாளர் திரு இ. நித்தியானந்தன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்த இவ்வைபவத்தில், பிரதம விருந்தினராக கலந்து கொண்டு புதிய கட்டிடத்தை திறந்து வைத்த யாழ். அபிவிருத்திச்சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு அ மகாதேவா தமது உரையில்; ''சட்டவிரோத மின் பாவனை அதிகரித்து வரும் இவ்வேளையில் இப்படியான பொது நிலையங்கள் தலையிட்டு இவற்றை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

வரவேற்புரை நிகழ்த்திய நிலையத் தலைதிகாரி திரு நா. ரவி குறிப்பிடுகையில்; 'ஒரு நூல் நிலையத்தில் ஒருவன் வாசிக்கத் தெரிந்து விட்டால் அவன் சீவிய காலம் வரை அறிவுள்ள மனிதனாக வாழ்கின்றான்' என்றார்.

நிலைய காரியதரிசி திரு. பெ. தவரத்தினம், திரு கே. பரமகுரு ஆகியோரும் உரையாற்றினர்கள்

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், (வ. உ.).

## மின்தறியாலையைக் குத்தகைக்கு விடுதல்

மேற்படி சங்கத்திலுள்ள 15 மின்தறிகள் மாதாந்த குத்தகைக்கு வழங்கப்படவுள்ளன. இவற்றை குத்தகைக்கு எடுக்க விரும்புவோர் விபரங்களுக்குச் சங்கத்தலைவரை 18-3-86ம் திகதி தொடக்கம் 27-3-86ம் திகதி வரை வேலை நாட்களில் காலை 9-00 மணி தொடக்கம் நண்பகல் 12-00 மணி வரை நேரடியாகத் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம் விண்ணப்ப முடிவுத் தகதி 27-3-86.

தலைவர்,
சங்கானை பல நோ. கூ. சங்கம், சங்கானை.

15-3-86. A 381

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதனமின்றி மாணித்த திருநெல்வேலி கலாசாலை வீதியைச் சேர்ந்த வயித்திலிங்கம் சிவஞானசுந்தரத்தின் மரணச் சொத்துச் சம்பந்தப்பட்ட விடயத்தில்

மரணித்தவர்.

சிவஞானசந்தரம மைப்பெண் சிவபாக்கியம் கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

மனுதார்.

இல. தத்துவம்; 3924

எதிர்

1. சிவஞானசுந்தரம் ஜெயசீலன், திருநெல்வேலி, வடக்கு, யாழ்ப்பாணம், தற்சமயம் ஜேர்மனி.
2. சிவஞானசுந்தரம் மகள் டாக்டர் ஜெயலோசனு, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
3. சிவஞானசுந்தரம் மகள் ஜெயகௌரி,
4. சிவஞானசுந்தரம் மகள் ஜெயமனோகரி,
5. சிவஞானசுந்தரம் மகள் ஜெயபாமினி தற்போது ஸ்ரீஸ்கந்தராசாவின் மனைவி,
6. ஆனந்தர் ஸ்ரீஸ்கந்தராசா, எல்லோரும் திருநெல்வேலிவடக்கு, யாழ்ப்பாணம்.

எதிர்வாதிகள்.

மேற்குறித்த இலக்கம் கொண்ட தத்துவ வழக்கு மேற்காணும் இறந்தவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இந்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதிவுப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரும் 1986ம் ஆண்டு தை மாதம் 10ம திகதி காலை 9-00மணிக்கு அல்லது அதற்கு முன்னர் இந்நீதிமன்றின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளைஏன் முற்ருக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறது.

1985ம் ஆண்டு ஐப்பசி மாதம் 09ம் திகதி

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

10-1-86

காரணம் காட்டும் திகதி 14-2-86க்கு நீடிக்சப்பட்டது.

மன்றின் ஆணைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

14-2-86

காரணம் காட்டும் திகதி 21-3-86க்கு நீடிக்சப்பட்டது.

மன்றின் ஆணைப்படி,
கு. குலசிங்கம்.
பதிவாளர்.

வரைவு;
ச. கிருஷ்ணகுமார்,
மனுதாரின் சட்டத்தரணி.

C 1273

## இன்றைய பலன்

மாதம்- பங்குனி
திகதி 4 [17 - 3 - 1986]
கிழமை- திங்கள்
திதி- ஸப்தமி முழு நாளும்
நக்ஷத்திரம்- ரோகிணி
மு. இரவு வரை

மேடம்: எதிர்பாராத முடிவுகள் ஏமாற்றத்தைத்தரும். எதிரிகளின் சூழ்ச்சி பலமாக இருக்கும். பழைய நினைவுகள் துன்பத்தைத்தரும்.

இடபம்: தனி வழிப்பயணத்தைத் தவிர்க்கவும். உடல் நலம் பாதிக்கப்படும். முதியவர் ஒருவர் உங்களுக்கு வழி காட்டுவர்.

மிதுனம்: சுறு சுறுப்பக் குன்றும். உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள். கொள்கையில் கோணலுடன் கோபமும் அதிகரிக்கும்.

கடகம்: தன்மானத்துடன் தன வரவிற்கும் இடமுண்டு குடும்பத்தில் தென்றல் வீசும். உறவினர்கள் வரவிற்கும் இடமுண்டு.

சிங்கம்; உல்லாசமாகப் பொழுதை போக்குவீர்கள். இன்று அதிக சுறு சுறுப்புடன் செயலாற்றுவீர்கள் பொருள் வரவிற்கும் இடமுண்டு.

கன்னி: பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும் திருடர் பயத்திற்கும் இடமுண்டு காணிப் பிணக்கு கவலையைத் தரலாம்.

துலாம்: மிகவும் வேண்டிய ஒருவரைப்பகைத்துக்கொள்ள நேரிடலாம். அவசரப் போக்கினுல் ஆபத்துக்கள் விளையும் வழக்கு விவகாரங்ளில் மாட்டிக்கொள்ள வேண்டாம்.

விருச்சிகம்: இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்கு கிடைக்கலாம். இல்லம் பல்கலைக்கழகமாக மாறும். அறிஞர்களின் வருகை உற்சாகத்தைத்தரும்.

தனுசு: நிதி நிலையில் நெருக்கடிகள் தென்படும். ஆயுதங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம் வேண்டும். பேச்சில் நிதானம் வேண்டும்.

மகரம்: புகழ் தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள் பெரியவர்களின் ஆதரவும் உண்டு எடுத்த கருமத்தை முடிப்பதில் வெற்றி அடைவீர்.

கும்பம்; தொழில் துறையில் முன்னேற்றம் தென்படும். மேலதிகாரிகளின் ஆதரவும் உண்டு. வியாபாரிகளாயின் புதிய தொடர்புகளுமுண்டு.

மீனம்: புதுமையான காரியங்களில் மனதைச் செலுத்துவீர்கள. வணிகர்களாயின் ஆதரவைப் பெறுவர் நிதி நிலையிலும் விரும்பத்தக்க முன்னேற்றம் உண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

## தவக்காலச் சிந்தனை



26-ம் நாள்

இருளைப் பழிப்பதை விட ஒளியை ஏற்றுவது மேல் என்பார்கள் இருள் சூழ்ந்த காலத்திலே வாழுகிறோம் என்று சினந்து மாள்வதிலும் பார்க்க நன்மைக்கு நாமே வித்திட்டு ஒளியை ஏற்ற முன்வர வேண்டும் எங்கும் போர் முழக்கமும் அழிவும், உயிர் இழப்புகளும் மலிந்து ஒருவரை ஒருவர் பழிவாங்கிவிடும் சமுதாயத்தில் சமாதானத்தின் தூது செல்ல அன்பின் உறவை வளர்க்க, மன்னிப்பின் பலனை அனுபவிக்கச் செய்ய முன்னின்று பணிபுரிபவர்கள் மிக அவசியம் தேவைப்படுகிருர்கள்.

'நானே உலகின் ஒளி' என்ற கிறிஸ்து தனது அன்புப் பணியலும், அருளின் கொடையாலும், மன்னிப்பாலும் இருளைப் போக்க முயற்சித்தார். பகையை அன்பினுல் வென்ருர். இருளை ஒளியால் போக்கினுர். தன்னை வரைந்தோரையும் மன்னித்தார். 'உண்மையாகவே இவர் கடவுளின் மகனுக இருக்கிருர்' என்று அவரைக் கொல்லப் பணிக்கப்பட்ட நூற்றுவர்களின் தலைவனுன போர்வீரன் அவர் தம் இரக்கத்தால் ஒளியைப் பரப்பினுர்.

நம் விருப்பம் நிறைவேருதபோது அதற்கு இணங்க மறுப்பவர்களை நாம் திட்டுவதோடு அவர்களை குறை கூறி அவர்கள் மேல் பழி சுமத்துகிறோம். ஒளியை மறைத்து இருளைப் பரப்புகின்ருேம். இரு வயோதிபர்கள் தம் ஆசைக்கு உடன்படாத சுசான்னு என்கின்ற பெண்மணி, வேருெருவருடன் தவறிழைத்ததாக பழி சுமத்தினுர்கள். "நான் யாதொன்றையும் செய்யாதிருந்தும் இதோ சாகின்றேனே" என அவள் மன்ருடியபோது ஆண்டவர் அவள் மன்ருட்டத்தைக் கேட்டருளினுர். நாமும் மற்றவர்களின் கொடுமைகளிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ள இறைவனை வேண்டுவோம் அன்பினுல் பகையை வெல்வோம். நல் வாழ்வின் ஒளியைப் பரப்பி இருளைப் போக்குவோம்

அருட்திரு இ ஜே.
அருமைநாயகம்.





சம்பூரண சலவைக்கு நுரைவளம் கூடிய
மில்க்வைற் நீலசோப்
பாவியுங்கள்.

விலை ரூ. 2/- மட்டுமே!

20 மில்க்வைற் நீலசோப்
மேலுறைகளில் உள்ள திருக்குறளை வெட்டி அனுப்பி அழகிய
திருவள்ளுவர் ஸ்ரிக்கர்
ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் — யாழ்ப்பாணம்.

(A 380)


## பண்ணை மிருக வைத்திய நிலையம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணையில் இயங்கி வந்த மிருக வைத்தியக் காரியாலயம் பிரவுண் வீதி 3 ம் இலக்க இல்லத்திற்கு மாற்றப்பட்டுள்ளது பசுக்கள் வளர்ப்பவர்கள் செயற்கை முறைச் சினைப்படுத்தும் சேவையை இனிமேல் பிரவுண் வீதியிலுள்ள காரியாலயத்திலிருக்கும உத்தியோகத்தரிடம் தெரிவித்துச் சேவையைப் பெற்றுக்கொள்ளலாமென்றும் 22313 இலக்க தொலைபேசி மூலம் இதுவரை அளிக்கப்பட்டுவந்த ஆலோசனைகள் தற்காலிகமாக நிறுத்தப் பட்டுள்ளதாகவும் வட பகுதிக்கான தீவிர கறவை உற்பத்தித்திட்டப் பணிப்பாளர் டாக்டர் அ. நவரத்தினம் தெரிவித்தார்.

## சரித்திரத்தையும்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

யதுமல்லாமல், கடவுளை நேரில் காணவேண்டும் என்ற உள்ளத்துடிப்புடன் இருந்த அவரது பிரதபசிஷ்யரான ஸ்ரீமத் சுவாமி விவேகாந்தருக்கும் நிதர்சனமாக்கியவர். எடுத்தகாரியம் முடியும் வரையும் முன்னேறிச் செல்லவேண்டும். பின் நோக்கிப் பார்க்கக் கூடாது. அப்போதுதான் அதி உயர்வான வாழ்க்கையை அடையமுடியும்'' என்றும் அவர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மில்க்வைற் அதிபர் திரு. கனகராசா உரையாற்றினுர். நாமகள்கலாலய மாணவர்களின் நடனநிகழ்ச்சிகளும் பரிசு பெற்றவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன இறுதியில் ஆலய அமைப்பாளர் திரு. இரா. மகேந்திரசிங்கம் நன்றியுரை நிகழ்த்தினுர்.

(ஐ)

## சான்றிதழ்கள் பெற்றனர்

(வண்ணார்பண்ணை)

கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலையத்தில் பயிற்சி பெற்ற 75 மாணவிகளுக்கு கடந்த வெள்ளிக்கிழமை சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. உடை தயாரிப்புப் பயிற்சி, பனை ஓலைக்கைப்பணிப் பயிற்சி, முதலுதவிச் சிகிச்சைப் பயிற்சி போன்றவற்றில் பயிற்சி பெற்ற பெண்களுக்கு இச் சான்றிதழ்கள் வழங்கப் பட்டன.

கோப்பாய் முன்னுள் உதவி அரசாங்க அதிபர் திரு கு. கிட்ணர் தலைமையில் இடம் பெற்ற இவ் வைபவத்தில் வலி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு கே சபாபதிப் பிள்ளை, விவசாயக் கல்வியதிகாரி செல்வி தி. பெரியதம்பி. பனை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் கலாநிதி மோகனதாஸ், சபை உறுப்பினர் திரு எஸ் பாலசிங்கம் உற்பத்தி உத்தியோகத்தர் திரு. சிவகணேசன், ஆகியோர் சான்றிதழ்களை வழங்கினர்.


# இடமாற்றம்

## பருத்தித்துறை குகன் ஸ்ருடியோ

10-2-86 முதல் மந்திகை கந்தமுருகேசனுர் சிலை சந்திக்கு கிழக்குப்புற மாகவுள்ள வீட்டுக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகிறோம்.

(A 378)


# கேள்வி விண்ணப்பம்

## இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு.

ஆனையிறவு, குறிஞ்சாதீவு உப்பளங்களில் கீழ்க்காணும் விடயங்ளுக்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 1. உழவு இயந்திர சேவை:

(அ) இரண்டாயிரம் கியூப் மண் வேலை
கேள்வி விண்ணப்ப முடிவுத் திகதி:
86-03-28 மாலை 2 மணி வரை

(ஆ) முப்பதினுயிரம் தொன் உப்பு மேடைகளுக்கு ஏற்றிப்பறித்தல்
கேள்வி விண்ணப்ப திகதி:
29-03 86 காலை 8-30 தொடக்கம்
18-04-86 மாலை 2 மணி வரை

### 2. கிடுகு விநியோகப்:

ஒரு இலட்சத்து ஐம்பதினுயிரம் கிடுகு மட்டைகள் வழங்குதல்
கேள்வி விண்ணப்ப திகதி: 19-04-86 காலை 8-30 தொடக்கம் 02-05-86 மாலை 2 மணி வரை.

மேலை விபரங்களையும், விண்ணப்பப்படிவங்களையும், ஆனையிறவு, இலங்கை தேசிய உப்புக கூட்டுத்தாபன பிராந்தியக் கந்தோரில் வேலை நாட்களில் காலை 8-30 தொடக்கம் மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

ஒவ்வொரு சேவைக்குமுரிய விண்ணப்பப் படிவத்திற்கும் மீளளிக்கப்படும் தொகை ரூபா 500/-ம் மீளளிக்கப்படாத தொகை ரூபா 50-ம் செலுத்தப் படல் வேண்டும்.

பிராந்திய முகாமையாளர்,
இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்,
ஆனையிறவு.

(A 377)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## மூவர் கைது

[கொழும்பு]

தொண்டமானாறு வெடிகுண்டுச் சம்பவத்தில் சிதறுண்ட பாலத்தின் உடைவுகளைப் பாதுகாப்புப் படையினர் அகற்றிக்கொண்டிருந்த வேளையில் தமிழீழ விடுதலைப் புலிகள் மூவரைக் கைதுசெய்துள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

(ச)

# இலங்கைமீது பொருளாதாரத் தடையை விதிக்கவேண்டும்!

## பதினொரு எதிர்க்கட்சிகள் பாரத அரசிடம் வலியுறுத்து

[ராய்ட்டர்]

இலங்கைக்கு வழங்கப்படும் பொருளாதார உதவிகளை நிறுத்தவேண்டுமென இந்திய அரசிடம் பதினொரு எதிர்க்கட்சிகள் வற்புறுத்தியுள்ளன.

''இலங்கைத் தமிழர் பிரச்னையை பொறுத்து இந்திய அரசு பின்பற்றிய கொள்கை தோல்வியையே தழுவிக் கொண்டுள்ளது என்பது நிரூபணமாகியுள்ளது. இந்தியாவின் ஊசலாட்டமான அணுகுமுறையே இத்தகைய நிலைக்கு இட்டுச்சென்றுள்ளது, இனப்பிரச்னைக்கு இராணுவத்தீர்வே ஒரே வழி என இலங்கை அரசு தீர்மானித்திருப்பது தெளிவாகத் தெரிகின்றது.

இலங்கை அரசுக்கு வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் இராணுவ உதவியை நிறுத்த இந்திய அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்'' என எதிர்க்கட்சிகள் கூட்டாக விடுத்துள்ள வேண்டுகோளில் வற்புறுத்தப்பட்டுள்ளது. (ஷ)

## ரயில்சேவை புதன்கிழமை வழமைக்குத் திரும்பும்?

[யாழ்ப்பாணம்]

பரந்தனில் நேற்றுமுன்தினம் 'யாழ்தேவி' தடம்புரண்டதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட வடபகுதி ரயில்சேவை நாளை மறுதினம் முதல் வழமைக்குத் திரும்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கைலாசபதி அரங்கில் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பேராசிரியர் கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை ''தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னனியும் என்னும் பொருள்பற்றி பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் 19ம் திகதி புதன் கிழமை தொடக்கப்பேருரை நிகழ்த்தவுள்ளார்.

1984ம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியராக நியமனம்பெற்ற கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை திருவனந்தபுரத்திலுள்ள திராவிட மொழியியற் கழகத்தில் சிரேஷ்ட ஆராய்ச்சியாளராக ஆய்வுகளை நடத்திய ஒரே ஒரு இலங்கையர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐவர் பலி!

[கொழும்பு]

மூதூர் - மல்லிகைத்தீவில் நேற்றுக்காலை சீருடையினர் ரோந்துச் சேவையிலீடுபட்டிருந்தபோது 5 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அவர்களின் சடலங்கள் எரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. [நா]

## பேராதனை செல்லும் மாணவர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள கூட்டத்திற்கு வரும்படி கோரப்பட்டுள்ளனர்.

பேராதனைக்குச் செல்வதற்கான பிரயாண ஒழுங்குகளை தாம் செய்துள்ளதாகவும், பிரயாணக்காசு எண்பது ரூபாவுடனும் தத்தமது அடையாள அட்டையுடனும் மாணவர்கள் இன்று பல்கலைக்கழகத்துக்கு வருவது, பிரயாண ஒழுங்குகளைச் சாத்தியமாக்க உதவுமென்றும் யாழ் அரசாங்க அதிபர் எம் பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் நவரத்தினம்

திருமதி பாக்கியம் நவரத்தினம் 16-3-86 காலமானார். அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் (இளைப்பாறிய அதிபர், விவேகானந்த வித்தியாலயம், அநுராதபுரம்) அவர்களின் அன்பு மனைவியும். திருமதி அருட்செல்வி சண்முகநாதன், திரு. இந்திரசேனன் (பொறியியலாளர், நீர்ப்ப சனத் திணைக்களம், செங்கலடி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகநாதன் (லங்கா சீமெந்து, காங்கேசன்துறை). திருமதி தயாளினி இந்திரசேனன் (ஆசிரியை, கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம் / கொக்குவில் நாமகள் மகாவித்தியாலயம் ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி கனகமணி தருமலிங்கம் அவர்களின் அன்புச் சகோதரியும், செல்வன் கோபிநாத். துஷ்யந்தன் ஆகியோரின் அன்பு பேத்தியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இல. 5, கச்சேரி கிழக்கு ஒழுங்கை இல்லத்தில் 8-3-1986 காலை 10-00 மணியளவில் நடைபெற்று. துண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உறவினரும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பொ. தருமலிங்கம்

[A 1281]

### மூத்ததம்பி சுப்பிரமணியம் (சுப்பையா)

மல்லாகத்தைச் சேர்ந்த மூத்ததம்பி சுப்பிரமணியம் [சுப்பையா] காலமானார். அன்னார் காலஞ்சென்ற போயிட்டி முத்துத்தம்பி, சேதுப்பிள்ளையின் மகனுமாவார் இவர் காலஞ்சென்ற சின்னத்தப்பி சரவணமுத்து. சிதம்பரம், சின்னச்சிப்பிள்ளை, பூரணம், பார்வதிப்பிள்ளை, சோதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரரும், சோதிப்பிள்ளையின் அன்புக்கணவருமாவார் மகேஸ்வரி [அளவெட்டி-மல்லாகம் ப நோ. கூ. சங்கம்], நகுலேஸ்வரன் இராசகுலசிங்கம் [தாத்தா]. பூபாலசிங்கம். காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார் அன்னாரின் ஈமச்சடங்கு மல்லாகம் குடும்ப மயானத்தில் இன்று பிற்பகல் 1-00 மணிக்கு நடைபெறும்.

தகவல்: நகுலேஸ்வரன் சிறி [மகன்]

(A 1283)

### ஆ. சவுந்தரராசா

இளைப்பாறிய பொதுவேலைத் திணைக்கள பிரதம லிகிதர் ஆறுமுகம் சவுந்தரராசா காலமாகிவிட்டார். இவர் கதிரமம்பாளின் அன்புக் கணவரும், செல்வநாதன் (பிரான்ஸ்), இராசநாதன் (பெருந் தெருக்கள் திணைக்களம், வேலணை, தில்லைநாதன் (கனடா), செல்வமலர், பத்மநாதன் (பிரான்ஸ்) ஜெயமலர். சோதிமலர், புனிதமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், ராமதாஸ் (மக்கள் வங்கி), மோகனராஜா (ரான்ஸ்லேட் என்ரபிறைசஸ்), இரத்தினமாலா, மதிமலர் ஆகியோரின் அன்பு மாமனும், பிரதீபன், சியாமளன். செந்தூரன், அரவிந்தன், காயத்திரி, பிரவீணா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-3-86 செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும்.

36, மெமோறியல் லேன்,
மானிப்பாய்.

(A 1282]

## மரண அறிவித்தல்

### சதாசிவம் சுந்தரம்

கோப்பாய், இருபாலை கிழக்கைச் சேர்ந்த சதாசிவம் சுந்தரம் (இளைப்பாறிய V. C. லிகிதர்) 16-03-86 அன்று சிவபதமடைந்துள்ளார். இவர் காலஞ்சென்ற பரமநாயகத்தின் அன்புக் கணவரும், இளைப்பாறிய புகையிரத லிகிதர் திரு. தியாகராசாவினதும், திருமதி மகேஸ்வரி கதிரித்தம்பியினதும் அன்புத் தந்தையும், திருமதி யோகமலர் தியாகராசா, திரு. சி. கதிரித்தம்பி ஆகியோரது அன்பு மாமனும், திருமதி இராஜயோகேந்திரராணி விசாகேசன், யோகேஸ்வரன், ஜெகதீஸ்வரன், சர்வேஸ்வரன், யோகவல்லி, விக்கினேஸ்வரன், சர்வேஸ்வரி, ஸ்ரீகுமாரி, குகனேசன், திருவருட்செல்வன், பவானிதிசி ஆகியோரது அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-03-86 (இன்று) பகல் 1-00 மணியளவில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்குமாறு தயவுடன் வேண்டப்படுகின்றனர்.

[A 1288]

### இரத்தினசபாபதி கெங்காதரன் [ஐயா]

இரத்தினசபாபதி - கெங்காதரன் [ஐயா] காலமானார். இவர். வேதரத்தினத்தின் அன்புக்கணவரும், சுந்தராம்பாளின் அன்புச் சகோதரரும், குமாரசாமி [இளைப்பாறிய ஆசிரியர்] யின் அன்பு மைத்துனரும், கிருபானந்தன், பரமேஸ்வரன், கனகராஜா [ராஜா ஹாட் வெயர் ஸ்ரோர், இருபாலை], காண்டீபன் [சவூதி] உமாசுதன், இராமநிதி, தயாநிதி, வேதகெங்கா, நந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சோமசேகரம், ஆசிரியர், திருவையாறு அ த.க. பாடசாலை] சுபத்திராதேவி, மனோன்மணி [றஞ்சிதம்] உமாதேவி ஆகியோரின் மாமனும், துஷ்யந்தி, குமரன், கண்ணன், லஷ்மன், ஜெனனி, கஜேந்திரன், கஜீபன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக இன்று திங்கட்கிழமை 17-3-86 10-30 மணியளவில் அன்னாரது இல்லத்திலிருந்து இருபாலை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இருபாலை சந்தி,
கோப்பாய்

தகவல்:
கிருபானந்தன்

[C 1272]

### வைத்தியபூபதி நமச்சிவாயம் துரைரத்தினம்

அராலி கிழக்கு வைத்தியபூபதி நமச்சிவாயம் துரைரத்தினம் 16-03-1986 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார். அன்னார் ரோசரத்தினத்தின் அன்புக் கணவரும், புஷ்பராணி, நிஸங்காதேவி, மோகனதாஸ் ஆகியோரின் அன்புத் தகப்பனரும், P. பாக்கியநாதன், விஜயகமூர்த்தி, புஷ்பராணி ஆகியோரின் அன்பு மாமனும், அகிலன் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்) இன் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 17-3-86 திங்கட்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில், அன்னாரின் இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்று, அராலி கிழக்கு மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

[A 1278]

### D. M. இராஜரட்ணம்

D. M. இராஜரட்ணம் (முன்னாள் தலைமை ஆசிரியர், பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்) காலமானார். அன்னார் மேரிதங்கரத்தினத்தின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற R J. S. இராஜரட்ணம், காலஞ்சென்ற E. மனோ இராஜரட்ணம், தயா (Ghana), A D S இராஜரட்ணம் (கனடா], இராஜவதி ஆகியோரின் தந்தையும், ராணி, செல்வராணி அலோட்டி (Ghana), ரஞ்சி (கனடா), செல்வசிங்கம் [அபுதாபி] ஆகியோரின் மாமனும் லில்லி காரளசிங்கம், புஷ்பம் நயில்ஸ் ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 17ம் திகதி திங்கட்கிழமை பி. ப. 3 மணிக்கு நடைபெற்று பரியோவான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

32, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம.

(C1275)

### திருமதி பறுவதம் சின்னத்தம்பி

திருமதி பறுவதம் சின்னத்தம்பி காலமாகிவிட்டார். இவர் கோப்பாய் தெற்கு இருபாலை விதானையார் ஒழுங்கையைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி அவர்களின் அன்புப் பாரியாரும், திருமதி அற்புதம்மார்க்கண்டு (ஓய்வுபெற்ற ஆசிரியை இருபாலை கந்தவேள் வித்தியாசாலை), செல்வி சிவபாக்கியம் சின்னத்தம்பி (ஆசிரியை ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாசாலை புத்தூர்), செல்விகள் தையல்நாயகி, டங்கயலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், இளைப்பாறிய தலைமை ஆசிரியர் க. மார்க்கண்டு அவர்களின் மாமியாருமாவர். அன்னாரது பூதவுடல் இறுதிக் கிரியைக்காக இன்று திங்கட்கிழமை மாலை 3-00 மணிக்கு அன்னாரது இல்லத்திலிருந்து இருபாலை மாயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். A 1284

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Ee'anadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.